செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்

(Subscription Rates)

உள்நாடு ரூ. 12 00 வெளிநாடு ரூ. 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00 வெளிநாடு ரூ. 200 00

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு	திருவள்ளுவர் ஆண்டு ௨0௧0, மாசி மார்ச்சு 1979	பரல்
௫௩		எ

அமெரிக்காவில் சைவசித்தாந்தம்

கீழை நாட்டுப் பேரொளியாகத் திகழ்ந்த விவேகானந்தர் அமெரிக்காவில் நடைபெற்ற உலகச் சமயங்களின் மாநாட்டில் கலந்துகொண்டு வேதாந்தத்தின் பெருமையை உலகுக்கெடுத்து உணர்த்தியபின், இந்தியாவிற்கு மீண்டும் வரும்போது சென்னை மாநகரில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பெற்றது. அவ் வரவேற்புக்கு ஏற்பாடு செய்த பாசுகர சேதுபதி அவர்கள் விவேகானந்தருக்கு மறைத்திரு. மறைமலையடிகளாரின் சமய ஆசிரியரான 'சைவசித்தாந்த சண்டமாருதம்' சோமசுந்தர நாயகரை அறிமுகப் படுத்திவைத்தாராம். நாயகர் சைவசித்தாந்தத்தின் அருமை பெருமைகளை விவேகானந்தருக்கு எடுத்துக் கூறினர். அவற்றைக் கேட்ட விவேகானந்தர் 'அமெரிக்காவிற்குச் செல்லுமுன் எனக்கு இவை தெரியாமல் போயிற்றே. தெரிந்திருப்பின் சைவ சித்தாந்தத்தின் சிறப்பை அங்குப் பரப்பிவிட்டு வந்திருப்பேனே' என்று குறிப்பிட்டதாகக் கூறுவர்.

விவேகானந்தருக்குக் கிட்டாத பேறு இன்று அமெரிக்க நாட்டினரான தவத்திரு. 'மாஸ்டர் சுப்பிரமுனியர்' (Master Subramuniya) என அழைக்கப்பெறும் குரு சுப்பிரமணியருக்குக் கிடைத்துள்ளது. சைவ சித்தாந்தத்தின் சிறப்பை உலகுணரச் செய்ய வேண்டுமென்பதற்காகச் 'சைவ சித்தாந்தத் திருமடத்தை'க் (Saiva Siddhantha church) குரு சுப்பிரமணியர் 1957 இல் நிறுவினர்.

கலிபோர்னியாவில் 1927 இல் பிறந்த இவர் நாட்டியக்கலையில் ஆர்வம் கொண்டு பல நாடுகளையும் சுற்றி வந்தார். 1947 இல் கலையார்வத்துடன் இலங்கைக்கு வந்த குருவிற்கு அருள் ஞானி

யோகாஸ்வாமியின் அருள் கிடைத்தது. அவரே குருவைத் தடுத்தாட்கொண்டு ஆன்ம ஞானத்தில் அவரை ஈடுபடச் செய்து சைவசித்தாந்தத்தைப் பரப்பும் பணியை அவரிடம் ஒப்படைத்தார்.

தம் ஞானசிரியரின் ஆணையை ஏற்றுக்கொண்ட குரு அவாய்த் (Hawaii) தீவுகளில் ஒன்ருன கௌவை (Kauai) என்ற தீவில் வயலுவா (Wailua) ஆற்றங்கரையில் சைவசித்தாந்தத் திருமடத்தை 45 ஏக்கர் பரப்பளவுள்ள தனிமை சூழ்ந்த இடத்தில் நிறுவி யுள்ளார். அவாய்த் தீவுகளின் தலைநகரான ஓனலுலு (Honolulu) விலிருந்து 102 கல் தொலைவில் இஃது அமைந்துள்ளது. இதன் சார்பில் சைவ சித்தாந்தத்தை முறையாகப் பயிற்றுவிக்க வயலுவா ஆழ்நிலைத்தியானக் கலைகளின் பல்கலைக்கழகம் (Wailua University of Contemplative Arts and Himalayan Academy) நிறுவப்பெற் றுள்ளது. இத் திருமடத்தின் உறுப்பினர்கள் வழிபடுவதற்காக வயலுவா ஆற்றங்கரையில் அவிந்துபோன எரிமலையொன்றின் அடிவாரத்தில் சிவன்கோயில் ஒன்றும் நிறுவப்பெற்றுள்ளது.

இத் திருமடத்தின் கிளைகள் நான்கு சான்பிராசிஸ்கோ, நெவாடா, நியூயார்க், இலங்கை ஆகிய இடங்களில் உள்ளன. இவற்றில் பல அமெரிக்கர்கள் சேர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

குரு சுப்பிரமணியர் சைவ சமயக் கருத்துக்களை எளிய நடையில் மக்களுக்குச் சொற்பொழிவுகள் மூலம் விளக்கி வருகிருர். சைவசமய சாத்திரங்களையும், குறிப்பாகத் திருமந்திரத்தையும் உலக முழுவதும் பரப்ப வேண்டுமென்று குரு பாடுபட்டு வருகிருர். திருக்குறளையும் உலகறியச் செய்ய வேண்டுமென்ற நோக்கம் குருவிற்கு உண்டு. அவருடைய சொற்பொழிவுகள் பெரும்பாலும் நூல் வடிவிலும் நாடாப்பதிவு செய்யப்பெற்றும் கிடைக்கின்றன. மேற்கூறிய பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு இவை பாடமாகக் கற்பிக்கப் பெறுகின்றன. அமெரிக்க நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து குரு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிருர்.

இவரிடம் பயின்ற மாணவர்கள் சைவசமயக் கருத்துக்களைப் பரப்புவதிலும் அமெரிக்காவில் அங்கங்குத் தோன்றிவரும் கோயில் களைப் பேணுவதிலும் ஈடுபட்டு வருகின்றனர். அவாய்த் தீவிலுள்ள சிவன் கோயில் இயற்கையாக அமையப்பெற்ற லிங்கத் தைச் சுற்றி எழுப்பப்பெற்றது. அதற்கு 'சன்மார்க்கத் திருக் கோயில்' என்ற பெயரைக் குரு சூட்டியுள்ளார். சான்பிராசிஸ் கோவில் பிள்ளையார் கோயில் கட்டப்பெற்றுள்ளது. நெவாடாவி லுள்ள குன்றின்மீது சுப்பிரமணியர் கோயில் அமைக்கப்பெற்று அம் மலைக்கே 'கந்தமலை' என்ற பெயரும் சூட்டப்பெற்றுள்ளது.

அங்கு இத் திருமடத்தின் வெளியீடுகள் அனைத்தையும் வெளியிடுவதற்காகச் சொந்தத்தில் ஓர் அச்சுக்கூடமும் நிறுவப்பெற்றுள்ளது. சான்பிராசிஸ்கோவிலும் 'சித்தாந்தா அச்சகம்' என்ற பெயரில் ஓர் அச்சுக்கூடம் இம் மடத்தைச் சார்ந்துள்ளது.

நியூயார்க் நகரில் ஃபிளசிங் (Flushing) பகுதியில் இந்துக் கோயில் ஒன்று அண்மையில் அமைக்கப்பெற்றது. அதில் பிள்ளையார், முருகர், சிவபெருமான், உமை, திருமால், திருமகள் ஆகிய திருமூர்த்தங்கள் உள்ளன. இக் கோயிலுக்கருகில் குரு சுப்பிரமணியரின் 'சைவசித்தாந்தத் திருமடத்தின்' கிளை ஒன்று தொடங்கப்பெற்றுள்ளது.


செட்டி நாட்டைச்சார்ந்த டாக்டர் ஏ. அழகப்பன் அவர்கள் அங்கு வாழும் சைவப்பெருமக்களுடன் இணைந்து ஊஸ்டன் (Houstan) நகரிலும், லாஸ் ஏஞ்சல்சிலும் (Los Angeles) கோயில்கள் எழுப்பத் தடங்கல்கள் ஏற்படுகின்றனவே என்று வருந்திக் குரு சுப்பிரமணியரிடம் அறிவுரை கேட்க அதற்கு 'அந்த இடங்களில் பிள்ளையார் சிலைகளை வையுங்கள். இடர்கள் நீங்கும்' என்று கூறினராம். அவ்வாறு செய்ய இடர்கள் நீங்கப்பெற்று இப்போது கோயில்கள் உருவாகி வருகின்றன.

அவ்வாறே பிட்ஸ்பர்க் நகரில் (Pittsburg) திருமாலின் நின்ற கோலத்தை அமைத்தபின் லாஸ் ஏஞ்சல்சில் கிடந்தகோலத்தை அமைக்க எண்ணியபோது சிலர் நின்றகோலம்தான் பொருத்தம் என்று கூறினர். இது பற்றிக் குரு சுப்பிரமணியரின் அறிவுரை கேட்டபோது 'இரண்டுமே உரிய கோலங்களே' என்று கூறி, கிடந்த கோலத்தை அமைக்க ஆணையிட்டுள்ளார். அவ்வாறே கோயிலும் உருவாகி வருகிறது.

இவ்வாறு திருக்கோயில்களை அமைப்பதிலும் சைவசமயக் கருத்துக்களைச் சொற்பொழிவாற்றுவதிலும் பெரிதும் ஈடுபட்டுள்ள குரு சுப்பிரமணியம் அவர்கள் திருக்குறளையும் திருமந்திரத்தையும் ஆங்கிலத்தின் வழியாக உலக முழுவதற்கும் பரப்பவேண்டுமென்று அதில் ஈடுபட்டு வருகிறார். திருக்குறளை ஆங்கில உரை நடையில் மொழிபெயர்த்து வெளியிடத் திட்டமிட்டுள்ளார். அவ்வாறே திருமந்திரத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பை வெளிக் கொணர்வதிலும் நாட்டஞ் செலுத்தி வருகிறார்.

பொருளியல் அறிஞரும் சித்தாந்தச் செல்வருமான டாக்டர். பா. நடராசன் அவர்கள் திருமந்திரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதில் பல்லாண்டுகளாக ஈடுபட்டுள்ளார். அவர் தம் மொழி பெயர்ப்புக்கள் 'குமரகுருபரன்', 'Saiva Siddhantha' இதழ்களில்

சிற்சில பகுதிகள் அவ்வப்போது வெளிவந்துள்ளன. இவற்றைக் கண்ட குருசுப்பிரமணியர் சென்ற ஆண்டு சென்னைக்கு வந்திருந்த போது டாக்டர் நடராசன் அவர்களுடன் கலந்துபேசித் திருமந்திரம் முழுவதையும் மிக அழகிய முறையில் ஆங்கிலத்தில் 12 தொகுதி களாக வெளியிடத் திட்டமிட்டனர். அம் முறையில் முதல்தொகுதி அச்சிட்டு முடியப்பெற்றுள்ளது. எஞ்சிய தொகுதிகளும் ஒன் றிரண்டு ஆண்டுகளுக்குள் முடிந்துவிடும். இப் பெரும்பணியில் ஈடுபட்டுள்ள குரு சுப்பிரமணியருக்குத் தமிழுலகம், குறிப்பாகச் சைவப் பெருமக்கள் நன்றிகூறுங் கடப்பாடுடையர்.



குரு சுப்பிரமணியன்

திருக்குறளிலும் திருமந்திரத்திலும் தம் மனத்தைப் பறி கொடுத்த குரு சுப்பிரமணியர் திருவள்ளுவருக்கும் திருமூலருக்கும் மிகப் பெரிய அளவில் கற்சிலைகளை அமைக்க முற்பட்டு, இரு பெரிய திருவுருவச்சிலைகளைச் சென்னையை யடுத்த மாமல்லபுரச் சிற்பக்கூடத்தில் உருவாக்கி, அவை இரண்டையும் சைவ சித்தாந்தத் திருமடத்தின் தலைமைப்பீடம் அமைந்துள்ள வயலுவா

ஆற்றங்கரையில் அமைத்துள்ளார். திருவள்ளுவர் சிலை முழங்கா விட்டு அமர்ந்த நிலையில் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டு எழுதுகின்ற பாங்கில் அமைந்துள்ளது. திருமூலர் திருஉருவம் தவநிலையில் அமர்ந்த கோலத்தில் உள்ளது. இனி சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர்க்கும் திருவுருவச் சிலைகள் அமைக்கப்பெறும். இத் திருவுருவச் சிலைகளைச் சுற்றிச் சிறு கோயில்கள் எழுப்பப்பெறும். கோயில்களுக்கு முன்பு தியான மண்டபங்கள் அமைக்கப்பெறும். மொத்தத்தில் கௌவைத்தீவு முழுவதுமே சைவ சித்தாந்த சமயத்தின் மேலைநாட்டுத் தலைமைப் பீடமாக உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளது. அங்கிருந்து சைவ சமயம் மேனாட்டுத் தொண்டர்கள் வழியாக மேலை நாடுகளில் பரப்பப் பெறும். தமிழ்நாட்டுத் திருமடங்கள் செய்யவேண்டிய ஒரு பெரும் பணியை மேலைநாட்டில் பிறந்த ஒருவர் தனித்து நின்று செய் வதைப் பார்க்கும்போது வியப்பாகவும் மலைப்பாகவும் உள்ளது.

குரு சுப்பிரமணியர் தாம் பயிற்றுவிக்கும் தொண்டர்கட்கு நல்ல சைவப் பெயர்களையும் சூட்டுகின்றார். அதையும் முறையாகப் பெயர் சூட்டு விழாவாக அமைத்துச் செய்கின்றார். திருமடத்தைச் சார்ந்த சிவன் கோவிலில் விநாயகப்பெருமான்முன் வழிபாடு தொடங்கி முறையே முருகப்பெருமானுக்கும் சிவபெருமானுக்கும் வழிபாடுகள் செய்து, தேங்காயும் உடைத்துப் பூ, பழங்களுடன் நடராசர் திருவுருவத்தின்முன் வைத்து, மக்கள் பெயர்மாற்ற விழா நடைபெறுகின்றது.

இவ்வாண்டுத் தொடக்கத்தில் 41 அடியார்களுக்குச் சைவப் பெயர் சூட்டப்பெற்றது. கீழே சூட்டப்பெற்ற சைவப் பெயரும் அன்னார்தம் இயற்பெயரும் காட்டாகச் சில தரப்பெற்றுள்ளன.

சைவப் பெயர்	இயற்பெயர்
திருநாதன் முருகன்	Carl James Williams
சோமசுந்தரம்	Christian Orta
ஆனந்த குமார்	Lislie Wilkenson
மணி நல்லூரன்	Richard Simmonds
சிவகுமார் நல்லூரன்	Kathy Simmonds
முருக நல்லூரன்	Joshua Simmonds

இவ்வாறு பெயர்மாற்றம் செய்யப்பெற்றவுடன் அதற்குரிய சான்றிதழ்களும் வழங்கப்பெறுகின்றன. அவர்கள் சைவர்களாக ஏற்றுக்கொள்ளப்பெறுகிறார்கள். உலகின் மறுமுனையிலிருந்து

கொண்டு சிவத்தொண்டு ஆற்றிவரும் தவத்திரு. குரு சுப்பிரமணிய சுவாமிகளின் பெருமையை என்னென்று எடுத்தியம்புவது!

குரு சுப்பிரமணியரின் 52ஆவது பிறந்தநாள் விழா இவ்வாண்டு சனவரி 5ஆம் நாள் கௌவைத் தீவில் கொண்டாடப் பெற்றது. இப் புத்தாண்டுப் பணியாக அவர் சைவசமயத்தை எளிய முறையில் மேலைநாட்டினர்க்கு விளங்கவைக்க 'The New Saivite World' என்ற ஆங்கில இதழை வெளியிடத் தொடங்கியுள்ளார். முதல் இதழ் பிப்ரவரித் திங்களில் வெளிவந்தது. இதில் திருமடத்தின் தொண்டுகளும் வயலுவா பல்கலைக் கழகத்தின் பணிகளும் சைவ நாயன்மார்களின் கதைகளும் பிற சைவசமயக் கருத்துக்களும் இடம்பெறும். இதே நோக்கத்துடன் இம் மடத்தின் இலங்கைக் கிளையைச் சேர்ந்த டாக்டர். எஸ். சண்முகசுந்தரம் 'SIVANERI' என்ற ஆங்கில இதழைத் தொடங்கி அதன் முதல் இதழைக் குரு சுப்பிரமணியம் அவர்களின் பிறந்தநாள் விழாவில் வெளியிட்டார். இவ்விரு இதழ்களும் இணைந்து சைவசமயத்தைப் பரப்பப் பாடுபடும்.

இத்தகைய பெரும் பணியில் ஈடுபட்டுள்ள குரு சுப்பிரமணியம் அவர்களுக்குப் போதிய பொருளுதவி மேலை நாட்டினரிடமிருந்தே கிடைக்கிறது. தமிழகத்துத் தமிழர்களை மட்டுமன்றி மேலை நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்களைக்கூட இவர் பொருளுதவிக்காக நாடாதது பெருவியப்பேயாகும். அமெரிக்கப் பெருமக்களிடமிருந்தே இருபதுலட்ச ரூபாய்க்கு மேல் பொருள் திரட்டிப் பல நல்ல பணிகளில் செலவிட்டு வருகிறார். அலைகடலுக்கு அப்பால் அமெரிக்க நாட்டில் அமைதியான முறையில் 'அன்பே சிவம்' எனும் சிவநெறியின் பெருமையை உலகுக்கெடுத்து ஓதிவரும் தவத்திரு. குரு சுப்பிரமணிய சுவாமிகள் எனும் மாஸ்டர் சுப்பிரமுனியா அவர்களின் சிவத்தொண்டு பெருகி வளர்ந்து சைவ சமயத்தின் பெருமையை நிலைநாட்டுவதாக.

"காலத்தையும் இடத்தையும் கடந்த பரசிவமான சிவனே முழுமுதற் கடவுள் என்பதை நான் நம்புகிறேன்."

"நான் சைவ மந்திரமான 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து (பஞ்சாட்சர) மந்திரத்தை நம்புகிறேன்."

இவ்வாறு ஒவ்வொரு சைவனும் சிலவற்றை உறுதியாகக் கொண்டு வாழ்க்கையில் கடைப்பிடித்தொழுக வேண்டுமென்று குரு சுப்பிரமணியர் வலியுறுத்துகிறார்.

———

சிவஞானபோத ஆராய்ச்சி

[அருட்டிரு அழகரடிகள்]

(சிலம்பு ௩௩, பரல் ௩ , உககஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி இரண்டாவது பிரிவு. இறைவன் அவ்வாறு செய்யும் கருணையை அன்பினுல் மறவாது உணர்ந்து வந்தால், அப் பேரின்பம் மேன்மேலும் பெருகி வருதல் இயல்பாகின்றது. ''அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே'' என்னும் திருமந்திரத்தின் நுட்பத்தை இங்கே இனிதுணரலாம். உயிர்களுக்குச் சிவப் பேற்றுக் காலத்தில், மனம் முதலிய அகக்கருவிகள் இல்லை; உயிரின் உள்ளமே அன்புணர்வினுல் அருளைப் பற்றிக்கொண்டு மேற்சென்று பேரின்பம் பெருகி நிற்கின்றது; இங்கே உள்ளம் என்பது, மனம் முதலிய கருவிகளல்ல ; உயிரின் உணர்வு நிலையே உள்ளம் எனக் கூறப்பட்டது.

இறைவன் உயிர்களுக்குச் செய்யும் இக் கருணையைப் பிறவி நிலையில் உணர்ந்துகொண்டு வீட்டு நிலையிலும் ஒன்ருகி இறை பணி நின்று மிகச் சிறப்பாக உணரத் தொடங்கிய உயிர்களுக்கு, இறைவனும் பேரின்பமாய்ப் பெருகிப் பொலிகின்ருன். அதை உணரும் உயிர் அந்தப் பேரின்பத்தில் தேக்கி நின்று அதிலிருந்து நழுவுதல் இல்லாமல் தொடர்ந்து சிக்கெனப் பற்றிக்கொள்கிறது. அப்படி ஒரே நிலையில் இன்பப் பெருக்கத்தில் நிற்றலால், அது சிவ நிட்டையாகிறது. நிட்டையின் இயல்புணர்த்துவது இந்த இரண்டாம் பிரிவு. இதன் மேற்கோளில் ஆசிரியர், 'பத்தியினுன் மறவாதேத்த அவனது சீபாதத்தை அணையும்' என்று இப் பிரிவுக்குக் கருத்து மேற்கொண்டார். 'அயரா அன்பின் அரன் கழல் செலுமே' என்னும் நூற்பாவின் நுட்பமும் இது! இங்கே அன்பென்றதை மேற்கோளில் ஆசிரியர் 'பத்தி' என்ருர். அன்பு- அன்புணர்வு ; சீபாதம் - திருவடிப் பேரின்பம்.

இதற்கொரு காரணம், ஆசிரியர் கூறினர். இறைவனும் உயிரும் இந் நிலையில் ஒருணர்வாய் இருக்கின்றனர். இது 'அன் னியம் இன்றி' என்று காரணத்தில் வந்தது.

வீடுபேற்று நிலையிலும் உயிர்கள் தம் இயல்புக்கேற்றபடியே பல திறமாய், இறைவனது இன்பத்தை நுகர்ந்து வரும். இறைவன் எல்லாரிடத்தும் ஒரே வகையான கருணை உடையவனுய் இருந்தாலும், உயிர்கள் பலவேறு அளவில் அதனைப் பலவேறு

அன்புணர்வாய் உணர்ந்து வருகின்றன. அப்படிச் செய்வோர் செய்திக்கு ஏற்றபடி, இன்பப் பயன் விளைந்து நிற்கும். அதனால், 'செய்வோர் செய்திப் பயனை விளைத்து நிற்றலான்' என்று காரணத்தில் ஆசிரியர் குறித்தார்.

இந் நிலை உடம்போடு கூடியிருந்தும் நிகழும்; கூடியில்லாமலும் நிகழக்கூடும். இன்பத்தை நுகரும் காலத்தில் சிலர் தமக்குக் கூடி வந்த இன்பத்திலேயே இன்புற்று நிற்பர். வேறு சிலர் இவ் வின்பத்துக்குக் காரணம் இறைவன் செய்யும் கருணையே என்று அடிப்படை உணர்வோடு அவ் வின்பத்தில் திளைப்பர். அதற்கேற்றபடி, அவர் துய்க்கும் இன்பமும் மேன்மேலும் பெருகி வரும். பெறுகின்ற இன்பத்தால் கருணையை மறந்துவிடாமல் அக் கருணையை ஏத்த ஏத்த இன்பமும் மேல்மேல் பெருகி வருதல் ஒருதலையாதலின், 'மறவாது ஏத்த' என்றார். 'தாயை மறந்து ஏயுமதே நிட்டை' என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கில் தாயை மறந்து என வந்தது, 'திரோதையை' மறந்து என்றபடி. ஏயுதல், அம்மையப்பரின் இன்பப் பெருக்கில் ஒன்றுதல் என்க. இது நிட்டையின் இயல்பு. அன்பினால் ஆண்டவனை நேர் உணரும் முறை; இது, துரியமும், துரியாதீதமும். முறையே அம்மையும் அப்பனும் முனைந்து நிற்கும் நிலைகள்!

உடம்புடைய 'சீவன் முத்தரில்' மிகு பக்குவம் அடைந்தோரும் உண்டு; சிறு பக்குவத்தோரும் உண்டு; பக்குவமே அல்லாதவரும் உண்டு. தாமரைகளில் உடனே மலரத்தக்க அளவில் உள்ள தாமரைகளும் உண்டு; மறுநாள் மறுநாள் மலரும் பக்குவத்திலும் சில தாமரைகள் இருக்கும். பிறவும் நிற்கும்; ஞாயிறு தன் ஒளியை எல்லாவற்றிற்கும் ஒப்பவே பொதுவாய் வீசி வரும். ஆயினும் அன்று மலரக்கூடிய தாமரை மட்டுமே மலரும்; மற்றவை பின்பு மலரும்; ஏனையவை மலரும் பக்குவத்தை முறையே எய்தி வரும்.

மற்றோர் உவமையும் ஞாயிற்றின் ஒளி விளக்கத்தால் அறியலாம். காணும் கண்களும், பார்வை குறைந்த கண்களும் உலகத்தில் உண்டு: அடியோடு தெரியாத குருட்டுக் கண்களும் உண்டு. ஞாயிறு எல்லாக் கண்களுக்கும் பொதுவாகத்தான் ஒளி கொடுத்து வருகிறது. ஆயினும் ஒளிமிக்க கண்களே நன்றாய்ப் பார்க்கும்; பார்வை குறைந்த கண்களுக்கு அவ்வளவாகத் தெரியாது; ஞாயிறு நேரே நின்றாலும் குருட்டுக் கண்களுக்கு ஒன்றுமே தெரியாது. அதைப்போல, இறைவனருள் வஞ்சனையில்லாமல் எல்லார்க்கும் ஒரே வகையாகத்தான் பொழிகிறது; சீவன் முத்தர்களிலேயே பல பக்குவத்தர்கள் இருப்பார்கள். அல்லாதார்களிலும் பல பக்கு

வர்கள் உண்டு. சீவன் முத்தரிற் பெரிது பாச விடுதலையடைந்த வர்கள், இறைவன் அருளால் நிரம்பப் பயன் எய்துவர். மற்ற வர்க்குப் பயன் அங்ஙனமன்று.

ஆதலால், 'சீவன்முத்தர்கள்' உடலோடு கூடியிருப்பவ ராளுலும் பாசமுடையவர் ஆகார். அவர் எடுத்த பிறவியுடல் அப் பிறவியோடு நீங்கிவிடும்; ஆதலால், அவர் பிறவியற்றவரே; சாகா நிலை உடையவரே; 'பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்' என்பது திருவாசகம்.

இக் கருத்துக்களையெல்லாம் தாங்கிக்கொண்டு இப் பிரிவில் ஒரு செய்யுள் வருகின்றது :

''அருக்கன்நேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீசன்; - அருட்கண்ணால்
பாசத்தை நீக்கும்; பகல்அலர்த்தும் தாமரைபோல்;
நேசத்தின் தன்உணர்ந்தார் நேர்.''

பொருள் :

அருக்கன் நேர் நிற்பினும் - ஞாயிற்றொளியின் எதிரில் நின்றாலும்; காணார்க்கு அல் இருளே - குருடர்க்குத் திணிந்த இருட்டே; இருட்கண்ணே பாசத்தார்க்கு ஈசன் - (அதுபோலப்) பாசமுடைய மக்களுக்குக் கடவுள் இருட்பார்வையே; பகல் அலர்த்தும் தாமரைபோல் - ஞாயிறு தன் ஒளியினால் மலரவைக்கும் பக்குவத் தாமரைகளைப்போல; அருட்கண்ணால் பாசத்தை நீக்கும்- கடவுள் தன் ஞானக்கண்ணால் பக்குவம் உடையோரின் பாசத்தை நீக்கி விடுவார், மலர்ச்சி தருவர்; நேசத்தின் தன் உணர்ந்தார் நேர் - அன்பினால் இறைவனை உணரும் 'சீவன்முத்தர்' அத் தாமரைக்கு ஒப்பாவார்.

பகலலர்த்தும் தாமரைபோல் என்னும் உவமை 'அருட் கண்ணால் ஈசன் பாசத்தை நீக்கும்' என்பதற்கு வந்தது. பகல், ஆகுபெயராய் ஞாயிற்றை உணர்த்தும். அன்பினால் ஆண்டவனை உணர்ந்து ஒன்றாக வேண்டுமேயன்றி மற்ற எதனாலும் ஒன்றுதல் இயலாது என்பார், 'நேசத்தின் தன் உணர்ந்தார்' என்றார். அல் என்பதும் இருள் என்பதும் ஒன்றேயாதலின், இரண்டும் சேர்ந்து, 'மிக்க இருள்' என்று பொருளாயின. 'அதுபோல' என நாம் வருவிக்க எடுத்துக்காட்ட வேண்டியிருத்தலால், இது, எடுத்துக் காட்டு உவமை. பகல் அலர்த்தும் தாமரை என்னும் உடன் பாட்டுவமை, பொருளில், 'பாசத்தை நீக்கும்' என்று எதிர்மறையில்

வந்தது. அதனால் கடைசியாக, 'நேர்' என வேறாக, மேலுங்கூற வேண்டியதாயிற்று.

உடலோடு கூடிய 'சீவன் முத்த'ராயினும் அவர்க்குப் பாசம் இல்லை. அருட்கண்ணால் நேராக ஈசனைக் காண்பர்' என்பது இச் செய்யுளில் குறிக்கப்பட்டது. பக்குவமும் அருளும், உடல்பற்றியன அல்ல; உயிரைப் பற்றியவை.

'பரமுத்தி'யிலேதான் பாசம் நீங்குமேயல்லாமல் 'சீவன் முத்தி'யில் நீங்குதல் இல்லை என்று சிலர் நினைப்பதுண்டு.

இருளை நிலவு சிறிது சிறிதாக நீக்கிவருதல்போல இறைவன் முதலிலிருந்தே உயிர்களைச் சேர்ந்து உயிர்களின் பாசத்தைச் சிறிது சிறிதாக நீக்கி வருதலுடையவன். உயிரின் பல பக்குவங் களுக்கு ஏற்றபடி, படிமுறையில் அவன் நீக்கி வருவான். இதனால், இறைவன் தன் நிலையில் திரிபடைவதில்லை.

முதன்மையாகத் தெரிந்துகொள்ள வேண்டிய நுட்பம் ஒன்று இதில் உண்டு. 'சலிப்பில்லாமல்' ஓயாது பாசம் நீக்கி வருகிறான் என்பதே அது. பாசம் நீக்கி உயிரின் உணர்வை மலரவைக்கும் முறைமை, தொடர்ந்தே வருகிறது என்று தெரிவிக்கும் பொருட்டும், அவன் அதனைத் தொன்மையிலிருந்தே சலிப்பின்றிச் சிறிது சிறிதாகச் செய்து வருகிறான் என்பதை வெளிப்படுத்தும் பொருட் டும், ஒரு செய்யுள் வருகின்றது. ஆணவ மலம் அத்துணை வலிமையுடையதாயிருக்கிறது; எப்படியும் நீக்கி உயிர்களை விடுவித்து வெற்றி பெறுதலால் கடவுள் அருள்; 'சத்தி' எனவும், 'எல்லாம் வல்லது' எனவும், செயல் முடியும் வரையில் விளைத்து எனவும் 'சலியாமை' வழங்குதற்குரியதாயிற்று.

"மன்னும் இருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னும் அரனே மலம்துரந்து—தன்னின்
வலித்திநம்பைக் காந்தம் வசம்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் தான்."

இதன் பொருள் :

மன்னும் இருளை மதிதுரந்தவாறு - பொருந்தும் இருளை நிலவு சிறிது சிறிதாகத் தன் கலையினால் நீக்கிப் பின்பு நிறைமதி யினால் தன் ஆற்றலின்படி முழுதும் நீக்கிவிடுதலைப் போல; அன்பின் மன்னும் அரனே மலம் துரந்து - அன்பினால் பொருந்தும் உயிரின் பாசத்தை இறைவனே சிறிது சிறிதாகப் படிமுறையில் நீக்கி வந்து, அவ் வுயிர் சீவன் முத்தரான நிலையில் நிறைவாகவே

ஒழித்து, தன்னின் வலித்து இரும்பைக் காந்தம் வசம் செய்வான் செய்தல்-காந்தம் இரும்பைத் தன்னிடம் இழுத்துத் தன்வயமாக்கிச் செய்தல் போலச், சலிப்பு இல் விகாரி அலன் தான் - இறைவன் அவ் வகையில் சலிப்பில்லாமல் அதனுல் திரிபும் கொள்ளாதவ ஞவான்.

'சீவன் முத்த'ரிடத்தில் சிறுகச் சிறுகத் தேய்ந்து முழுதும் பாசமில்லை என்பதற்கு மதியின் உவமை வந்தது. அன்பினுல் அன்றி வேறு எதனுலும் இறைவன் உணர்வோடு ஒன்ருதல் இயலாது என்பதற்கு 'அன்பின் மன்னும் அரன்' எனவும், இறை வனுல் உயிர்களின் மலத்தைத் தீர்க்க முடியுமேயன்றி உயிரின் முயற்சியினுலோ மற்றத் தேவர்களின் உதவியாலோ நீக்கிக் கொள்ள இயலாது என்பது புலப்படும்படி 'அரனே மலந்துரந்து' எனவுங் கூறப்பட்டது. செய்தல் என்பதன் பின் 'போல' என்று உவமை உருபு விரித்துக் கொள்க.

இரும்பைத் தன்வயப்படுத்துவதனுல் காந்தம் திரிபடைவ தில்லை; அதிற் சலித்தலும் இல்லை. காந்தத்தின் முன்னிலையில் அதன் ஆற்றல் பரவும்போது இரும்புக்குத்தான் திரிபு ஏற்படுகிறது. அதுபோன்றதே இறைவனுேடு உயிரின் உணர்வு; திரிபு உயிர்க்கேயன்றி இறைவனுக்கில்லை. இறைவன் திருமுன்னிலை யில் அவன் ஆற்றல் மட்டும் எங்கும் பரவியிருக்கிறது. அதில் அகப்பட்ட பக்குவ உயிர் இறைவன் உணர்வை அடைகிறது. உயிரை ஈர்த்தலில், இறைவன் சலிப்பு அடைவதில்லை.

சலிப்பில்லாமல் கருணை செய்து வருவதனுலேதான் உயிர்கள் சிறிது சிறிதாகப் பாசம் நீங்கி இறைவனைச் சேர்கின்றன. இவ்வாறு சளைக்காமல் இறைவன் செய்து வருகிற செயலை உயிர்கள் நினைந்து நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து வருதல் வேண்டுமன்றே? சீவன் முத்தர்க்கு அப் பக்குவம் இருக்கிறது. அவர் மட்டுமே அன்பால் உருகி நிற்பர். அதனுல் 'அன்பின் மன்னும் அரன்' என்று இயல்பாகக் கூற நேர்ந்தது.

உலகப் பொருள்களிற் பற்றுயிருந்த உயிரின் உணர்வுதான் மாறி, இறைவன் அன்பில் ஈடுபட்டு ஒன்றுகிறது. இதனுல், உயிரின் உணர்வே மாறுதற்குரியது என்று தெரிந்துகொள்ள லாம். உயிரின் அன்புணர்வே சிவமுமாகிறது. மங்கலம் பெறு கிறது; தன்னை மறந்து பேரின்பம் எய்துகிறது.

''நசித்தொன்றின் உள்ளம் நசித்தலால் ஒன்று;
நசித்திலதேல் ஒன்றுவ தில்லை— நசித்துமலம்

அப்பணைந்த உப்பின் உளமணைந்து சேடமாம் ;
கப்பின்றும் ஈசன் கழல்.''

இச் செய்யுளால் வீடுபேற்றில் விளங்கும் இரண்டன்மை (அத்துவிதம்) நிலையும் விளங்குகிறது. பாடாண வாத சைவர்க்கு ஒரு நினைவு. வீடுபேற்றில் இன்ப நுகர்ச்சி உண்டென்பது அவர்க்கு உடன்பாடு அன்று ; 'தொன்மையே உயிரோடு சேர்ந் துள்ளது ஆணவமலம் ; ஆதலால், அது நீங்குதற்குரியதன்று' என்பது அவர் கருத்து. ஆனால் நீங்கி, உயிரும் இன்புறும் என்று ஆசிரியர் கூறுவார். அதுவும் இச் செய்யுளால் விளங்கும்.

நசித்து ஒன்றின் - (வீடுபேற்றில்) உயிர் கெட்டு ஒன்றும் என்றால் ; உள்ளம் நசித்தலால் ஒன்று - உயிர் அழிந்து விடுத லால் ஒன்றாது ; (எப்படி ஒன்றும் ?) நசித்திலதேல் - உள்ளம் கெடாமல் நிற்குமானால் ; ஒன்றுவதில்லை - (இருபொருளாய் இருத்தலால்) ஒன்றுவதுமில்லை ; (அப்படியானால் சேர்வது எப்படி என்று தோன்றும்) ;

அப்பு அணைந்த உப்பின் - உப்புக் கட்டி கரைந்து நீரை அணைந்ததுபோல; நசித்து - மலம் தன் கட்டித் தன்மை மட்டும் கரைந்து கெடுதலால்; உளம் ஈசன் கழல் அணைந்து - உயிர் சிவத்தின் திருவடி சேர்ந்து; சேடம் ஆம் - அடிமையாகும்; கப்பு இன்றும் - மீளக் கிளைத்தல் இல்லையாம்.

கிளைத்தல் இல்லை என்பது பிறவி இல்லை என்றபடி. இது, 'சீவன் முத்தர் நிலை. ஒன்றாது என்பது ஒன்று என ஈறுகெட்டு நின்றது. (ஈறுகெட்டு நின்றாலும் சொல் இருப்பதுபோல) மலத்தின் வல்லமை வீடுபேற்றில் அழிந்து நிற்றலால், 'நசித்து மலம்' என்றார். நசித்து : காரணப் பொருளது. அப்பு அணைந்த உப்பு என்றால், உப்பு இருக்கிறது. உப்பின் கட்டிமட்டும் இல்லை. அது போலச் சிவத்தை அணைந்த உயிர்க்கு அதனோடு தொன்மையே சேர்ந்ததாதலால் வீடுபேற்றிலும் மலம் இருக்கிறது; அதன் கெட்டித் தன்மையாகிய வல்லமை மட்டும் இல்லை.

உப்பு அளவாய் இருந்து உணவில் இன்பம் பயப்பதுபோல மலமும் வீடுபேற்றில், 'இதனை விளைத்தல் மலம்' என்னும்படி இன்பச் சுவையை மிகுப்பதாயிருக்கிறது. அப்பணைந்த உப்பு என்னும்போது அப்பில் அணைந்த உப்பு என்பது பொருள். உவமையில் அவ்வாறு வந்தமையால் உவமேயமாகிய பொருளிலும் மலம் உளம் அணைந்து என்று கொள்க. உள்ளத்துக்கு உவமை அப்பு. அப்பணைந்த உப்பின் என்னும் உவமைக்கு உவமேயம் 'நசித்து மலம்' என்பது. மலத்தின் வல்லமை நசித்தலுக்கு உப்பின்

கெட்டித் தன்மை கரைந்து என்பது பொருள். 'நசித்து' என்பது மலத்தின் வல்லமை நசித்தலேயன்றி, மலம் நசித்தலன்று. நசித்த லால் என நின்று காரணப்பொருள் தந்தது. உளம் ஈசன் கழல் அணைந்து சேடமாயிற்று. மலத்தின் வல்லமை நீங்கிவிட்டமை யால், உயிர் சிவத்தின் ஞானத்தோடு சேர்ந்து திரண்டது; சேடம்-திரண்ட மிச்சப் பொருள். கப்பு, கிளைத்தல்; மீளவும் பிறவி கிளைத்தல்; மலத்தின் ஈர்ப்பு இல்லை என்றபடி. ஈசன் கழல் ஈசனது சிவஞான நிறைவு. அதனோடு சேர்ந்து உயிர் ஒன்றுதலை 'உளம் அணைந்து' என்றார். அணைந்து - கழல் அணைந்து;

அணைந்தாலும், பேரின்பச்சுவை பெருகினாலும், அங்கும் உயிர் இறைவனேயாதல் இல்லை. "ஆள் ஆம் நாம் அங்கு' என முன்னும் வந்தது. 'வீடுபேற்றில் உயிர் இறைவனேயாகி அவனளவு விரிதலும் (வியாபகம்) ஆகும்' எனக் கருதும் மாயா வாதியரையும் இக் கருத்து மறுத்தது. பிறவி நிலையில், இறை வனுக்கு உயிர் அடிமையென்பது பொதுநிலை; வீடுபேற்றில் அவ்வாறு கூறுவது சிறப்புநிலை! கடைசியாக ஒரு செய்யுள் :

"பொன்வாள்முன் கொண்மூவில் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே எங்குமாந் தன்மைபோல்—முன்வாள்
மலத்துள் மறைந்துள்ளம் மற்றுலகை உண்ணும்
மலத்திரித்துச் செல்லும் வரத்து."

பொருள் :

முன் - பகல் நேரத்தின் முன் நேரமாகிய காலைப் பொழுதில்; பொன்வாள் - ஞாயிற்றின் ஒளி; கொண்மூவில் புக்கு - மேகத்தில் மறைந்து, (தன் இயல்பான ஒளி தெரியாமல் இருந்து); ஒடுங்கி - மேகம் சிறிது நீங்கியபோது தன் ஒளியும் சிறிது ஒடுங்கித் தெளிந்து; போய் அகலத்தன்வாளே எங்குமாம் தன்மை போல் - மேகபடலம் முற்றும் நீங்கி அகன்று போகத் தன் இயல்பான ஞாயிற் றொளியே எல்லை எங்கும் விரிந்து விளங்குந்தன்மைபோல; முன் - தொன்மையாகவே, உள்ளம் வாள் மலத்துள் மறைந்து - உயிர்தன் இயல்பான அறிவு ஒளி ஆணவ மலமாகிய படலத்துள் மறைந் திருந்து (கேவலப்பட்டு); மற்று - அது மாறி மலம் சிறிது நீங்கிய போது; உலகை உண்ணும்—பொறிகளால் உலகத்தை நுகரும்; (இது சகல நிலை); வரத்து - ('சுத்த நிலை'யாகிய ஞான குருவின்) வரவில், மலத்து-(பதிஞான ஒளி பரவுதலால்) மேகபடலம் போன்ற மலத்தை; இரித்து - முற்றும் அதன் வல்லமையைத் திருவருளாற் கெடுத்து; செல்லும் - (உயிர் இறைவன் திருவடிப் பேரின்பத்திற்) சென்றணையும்.

உயிரின் 'கேவல சகல சுத்த நிலை' மூன்றிலும் இறைவன் செய்துவரும் உதவி கூறப்பட்டது; மலத்தின் வல்லமை வரவரக் கெட்டு வருதலை உயிர் உணர்ந்து நெகிழும்; தான் எஞ்ஞான்றும் நிலையுள்ள பொருளாயிருத்தலையும், வரவரத் தன் அறிவு ஒளி மிகுந்து வருதலையும் உயிர் தெரிந்துகொள்கிறது. 'அரன் கழல் செலுமே' என்று நூற்பாவில் வந்ததனால் இங்கும் 'செல்லும்' என்றார். பொன் - ஞாயிறு; பொன்னிறம் போற் பொலிதலால் ஆகுபெயராயிற்று. 'புக்கு' 'ஒடுங்கி' 'ஆம்' என மூன்றும், கேவல சகல சுத்த நிலைகளில உயிரின் அறிவொளி, இருந்து, தெரிந்து, நிறைந்த நிலைமையை விளக்கின. மற்று, வினைமாற்றுதலின் 'மாறி' எனப் பொருளுரைக்கப்பட்டது. மலத்து வல்லமை 'மலத்து' என நின்றது. வரத்து, சிவஞான வரத்தில்.

வீடுபேற்றில் மலம் தன் வல்லமை கெட்டுப், பொருளளவாய்ச், சந்தனம் மலர் போல இன்பத்தை விளைத்துக்கொண்டு உதவியாய் இருக்கிறது. உயிர் தன் அறிவு விளங்கிப் பேரின்பம் நுகர்ந்து கொண்டு மற்றெல்லாவற்றையும் மறந்து திளைத்திருக்கிறது. சிவம், மலவழி கெடவும் உயிர் அறிவு விளங்கித் தன் இன்பம் பெருக்கெடுக்கவும் செய்துகொண்டு, எப்போதும்போல் திரிபில்லாமல் இருக்கிறது. இங்ஙனம் முத்திதனில் மூன்று முதலும், முப்பொருளாய் நிலைகொண்டிருக்கின்றன.

(தொடரும்)

கலப்பு மொழியால் வருங்கேடு

"எனது விருப்பப்படிதான் யான் பேசும் மொழியைத் திரித்தும், அயல்மொழிச் சொற்களோடு கலந்து மாசு படுத்தியும் வழங்குவேன்; அம் மொழியின் அமைப்பின்படி யான் நடக்கக் கடவேன் அல்லேன்" என்று ஒவ்வொருவனுந் தனது மொழியைத் தன் விருப்பப்படியெல்லாந் திரித்திக்கொண்டு போவானாயின், சிறிது காலத்தில் ஒரு மக்கட் கூட்டத்தாரிலேயே ஒருவரை யொருவர் அறிந்துகொள்ள முடியாத வகையாய் ஒவ்வொரு சிறு கூட்டத்திற்கும் ஒவ்வொரு புதுமொழி காலந்தோறும் உண்டாகி அம் மக்களை ஒன்றுசேர விடாமல் அவர்களைப் பல சிறு கூட்டங்களாகப் பிரிந்துவிடும்.

—மறைமலையடிகள்

(மறைமலையடிகளார் உரைமணிக் கோவை, பக். 62)

எகர ஒகர இயற்கை

[ஞா. தேவநேயன்]

தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமை முதலிய தன்மைகள், கடந்த மூவாயிரம் ஆண்டாகத் தமிழ்ப் பகைவரால் மறைக்கப்பட்டும், ஆராய்ச்சியின்மையால் தமிழரால் அறியப் படாதும், இருப்பதால், எழுத்து என்னும் அடிப்படை நிலையிலேயே, மாணவர்க்கு மட்டுமன்றி ஆசிரியர்க்கும் மயக்கமுண்டாமாறு, பல்வேறு கூற்றுக்கள் தமிழுக்கு மாறாகவும் உண்மைக்கு முரணாகவும் அடுத்தடுத்துத் தமிழரென்பாரும் நிகழ்த்தி வருகின்றனர். இங்ஙனம் தம் செயலை அறியாது காட்டிக்கொடுப்பாரும் அறிந்தே காட்டிக் கொடுப்பாரும் ஆகிய இருவகை வையாபுரிகளை அல்லது கேள்போற் பகைவரைத் துணைக்கொண்டே, வாள்போற் பகை வரும் தமிழைக் கெடுக்கத் துணிந்து முனைகின்றனர்.

''தொல்காப்பியனார் தமது நூலில், அக்காலத்தில் வழங்கி வந்த எழுத்துக்கள் எவ்விதம் வரிவடிவில் எழுதப்பட்டு வந்தன வென்பதைக் குறிப்பிடவில்லை; ஆயினும் சில எழுத்துக்கள் புள்ளி பெற்று நிற்பதை மாத்திரம் குறிப்பிட்டுள்ளார். அவ்வெழுத்துக்கள் குற்றியலுகரம், குற்றியலிகரம், மகரக்குறுக்கம், ஆய்தம், மெய் யெழுத்து, எகரம், ஒகரம் என்பன.

''உயிரெழுத்துக்களுள் அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்தும் தமக்கு இனமான நெடில்களை உடையன. அ, இ, உ ஆகிய மூன்றுக்கும் இனமாகிய நெடிலைத் தெரிவிக்க அக் குறில் உருவத் துக்கு ஓர் அதிகப்படியான குறி சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் எகரம் ஒகரம் ஆகிய இரண்டின் விஷயத்தில் குறிலைக் குறிக்கும் பொழுது அதிகப்படியான புள்ளி சேர்க்கப்பட்டுள்ளன. குறிலின் நீட்சியே நெடில். ஆதலின் நெடிலின் வேறுபாடு விளங்கக் குறிலுருவத்துக்கு அதிகப்படியான குறியிட்டு நெடிலை உணர்த்து வதே இயற்கை. எகர ஒகரங்கள் அந்தப் பொதுவிதிக்கு மாறு பட்டுள்ளன. ஆசிரியரும் அ, இ, உ ஆகியவற்றுக்குரிய நெடி லுருவத்தைக் குறிப்பிடாமல், இவ்விரண்டை மட்டும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

''ஆதலின், எகர ஒகரங்களுக்குக் குறில் இல்லாமல் நெடிலே வழங்கும் ஒருவகையினின்றும் இவ்வெழுத்துக்களின் உருவங்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்றே நாம் எண்ணவேண்டியிருக்கிறது. வடமொழியில் எகர ஒகரங்கள் நெடிலையே குறிக்கும். அவற்றிற்கு

வடநாட்டார் இட்ட குறிகளை அவ்வாறே தமிழிலும் நெடிலுக்கு மேற்கொண்டு, அந் நாட்டாரால் வழங்கப்படாத குறிலையுணர்த்த வேறு குறிகளை அமைக்க வேண்டி வந்தது போலும். புள்ளியினால் மாத்திரைக் குறைவை அறிவித்தலைப் பிற புள்ளியிட்ட எழுத்துக் களால் அறியலாம். அதைப் போலவே எகர ஒகரங்களின் திறத் திலும் நெடிலினின்றும் குறைந்த குறிலை உணர்த்தப் புள்ளி யிட்டனர் என்றே கொள்ளவேண்டும்'' என்று திரு. தி. நா சுப்பிர மணியனார் தம் ''பண்டைத் தமிழ் எழுத்துக்கள்'' என்னும் சுவடியில் (பக். 86-7) வரைந்துள்ளார்.

இலக்கண நூலார் எழுத்துக்களின் வரிவடிவுகளைக் குறிப்பதே யன்றி, அவற்றை வரணிக்கும் வழக்கம் எங்குமில்லை; அவற்றை வரணிக்கவும் முடியாது. டகர பகரம் போன்ற இரண்டொரு நேர் கோட்டு வரிவடிவுகளை மட்டும் ஓரளவு வண்ணிக்கலாம். ஆயின், அதனாற் பெறும் பயனில்லை. எழுத்துக்களை எழுதுதலே, அவற்றின் வரிவடிவைக் காட்டுதலன்றி வேருகாது.

புள்ளியென்பது எழுத்துக்களின் வேறுபாட்டுக் குறியேயன்றி உண்மையான வரிவடிவாகாது. இதை யுணராது, பெரும் புலவரும் சிறந்த உரையாசிரியருமான நச்சினார்க்கினியரும், மகர வடிவைப்பற்றி வழுப்பட வுரைத்துவிட்டார்.

''உட்பெறு புள்ளி யுருவா கும்மே'' (தொல். நூன். 14)

மகர வரிவடிவின் அடைப்புள்ளிட்ட புள்ளி, மகரக் குறுக்கத்தின் வடிவாம் என்பதே இதன் பொருள்.

மகரக் குறுக்க வடிவு, தெலுங்கு கன்னட வண்ணமாலைகளில் இரண்டாம் டகரத்திற்குள்ள வரிவடிவை ஒருபுடை யொத்தது. தமிழ் மகர வடிவு இன்று போன்றே அன்றும் இருந்தது. மேற் குறித்த நூற்பா மகரக்குறுக்க வரிவடிவு பற்றியதேயன்றி, மகர வரிவடிவு பற்றியதன்று. அதைப் பிறழவுணர்ந்து, பகர வரிவடி வுள் ளிட்ட புள்ளியே மகர வரிவடிவம் என்று உரைத்ததொடு, அதை வரைந்தும் காட்டிவிட்டார் நச்சினார்க்கினியர். அவர் உரை வருமாறு :—

''உட்பெறு புள்ளி யுருவா கும்மே.'' (நூற்பா)

''இது பகரத்தோடு மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய் கின்றது.

''மகரம் அதிகாரப்பட்டு நிற்றலின் ஈண்டுக் கூறினர்.

"இதன் பொருள்: உட்பெறுபுள்ளி—புறத்துப் பெறும் புள்ளியோடு உள்ளாற் பெறும் புள்ளி, உருவாகும்—மகரத்திற்கு வடிவாம் என்றவாறு.

"எனவே, புறத்துப் பெறும் புள்ளியாவது மேற்சூத்திரத்தான் மெய்கட்குக் கூறும் புள்ளி. ஈண்டு உருவென்றது காட்சிப் பொருளை உணர்த்தி நின்றது.

. .

"உதாரணம்: கப்பி கப்பி (கம்மி) என வரும் இஃது எதிரது போற்றல்."

இனி, உயிர்மெய் வடிவு பற்றிய "புள்ளியில்லா...ஆறே" (17) என்னும் நூற்பாவுரையிலும்,

"அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர். மகரம் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினர்" என்று தம் வழுவைக் கோடிட்டுக் காட்டிவிட்டார். "உருவு திரிந்துயிர்த்தல்" என்பது உயிர்மெய் வடிவுகட்குரியதே யன்றி, மகர வடிவிற்குரியதன்று

"மெய்யின் அளவே அரையென மொழிப," (நூன். 11)

"அவ்வியல்நிலையும் ஏனை மூன்றே." (ஷை 12)

"அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகும் தெரியுங் காலை" (ஷை 13)

என்று முன்வரும் நூற்பாக்களையும்,

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்." (ஷை 15)

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே." (ஷை 16)

எனப் பின்வரும் நூற்பாக்களையும், புள்ளி பெறுதலன்றி ஓரெழுத்திற்கும் தொல்காப்பியர் வடிவு கூறுமையையும் நச்சினார்க்கினியர் நோக்கியிலர்.

மேலும், மகர வடிவிற்கு அகத்தும் புறத்தும் புள்ளியிடுவது ஏட்டெழுத்திற்கு இடர்ப்பாடான தென்பதையும், பகரவுட் புள்ளியை வளைத்தெழுதும் பகுத்தறிவுகூடப் பண்டைத் தமிழறிஞர்க்கு இல்லாதிருந்திருக்காது என்பதையும் அவர் கருதியிலர்.

இலக்கணப் புலமையில்லாத் தி. நா. சுப்பிரமணியனாரும் மகரக் குறுக்க வடிவு கூறும் நூற்பாவென்று கண்டபோது, நச்சினார்க்கினியர் காணாது போனது ஆனையடிச் சறுக்கலே.

நச்சினார்க்கினியர் வழுவுரை, தமிழெழுத்துக்கள் ஏற்கெனவே பன்முறை வடிவு மாறின என்று கூறும் எழுத்துமாற்றக்காரருக்கு, ஒரு போலிச் சான்றாகவும் வாய்த்துவிட்டது.

கீழையாரியர் இந்தியாவிற்குட் புகுந்த காலம் தோரா கி. மு. 2000. அவர்க்கன்று இலக்கியமும் இல்லை; எழுத்துமில்லை; தமிழரோ கி. மு. 10,000 ஆண்டுகட்குமுன் தலைக்கழகக் காலத்திலேயே முத்தமிழிலக்கிய விலக்கணங் கண்டவர். மேலும், உயிர், மெய், உயிர் மெய் என்னும் மூவகையெழுத்துக் கொண்ட நெடுங்கணக்கு முதன் முதல் தமிழிலேயே தோன்றிற்று. இனி, சமற்கிருதத்திற்கு முந்திய வேதமொழி யுட்பட ஆரிய மொழிகட்கெல்லாம் தமிழ் முந்தியதும் மூலமுமான மொழியென்று, அதன் முச்சுட்டெழுத்துக் களே முழுச்செவிடனுக்குங் கேட்குமாறு முழங்கிப் பறையறை கின்றன.

இனி, கிரந்த எழுத்தும் தேவநாகரியும் தமிழெழுத்தினின்றே திரிந்துள்ளன என்பது, ஊன்றி நோக்குவார்க்குப் புலனாகாமற் போகாது. இந் நிலையில், தமிழ் ஏகார ஓகார எழுத்துக்களை வட மொழியினின்று கடன்கொண்ட தென்பது, பாட்டன் திருமணத் தைப் பேரனே நடத்திவைத்தான் என்பது போன்றதே.

ஒரு மொழியிலுள்ள சொற்களினின்றே அம் மொழிக்குரிய எழுத்துக்கள் அமைக்கப்படும். அயன்மொழியிலுள்ள சிறப் பெழுத்துச் சொற்கள் கடன் கொள்ளப்படினும், அச் சொற்களே யன்றி அவற்றின் சிறப்பெழுத்துக்கள் முதற்கண் வழக்குப் பெறா. ஏகார ஓகார வடிவுகள் வடமொழியினின்று வந்தனவெனின், அவ் வீரெழுத்துக்களையும். உயிராகவோ உயிர்மெய்க் கூட்டிலோ, முதலாகவோ இடையாகவோ கடையாகவோ கொண்ட சொற்கள் தமிழில் இல்லாதிருந்திருத்தல் வேண்டும்.

ஏ, ஏக்கம், ஏங்கு, ஏசு, ஏடாசி, ஏடு, ஏணி, ஏணை, ஏது (வினா), ஏந்து, ஏப்பம், ஏமா, ஏமாளி, ஏய், ஏர், ஏராளம், ஏரி, ஏல், ஏல, ஏலம், ஏவு ஏழு, ஏழை, ஏற்பாடு, ஏற்றம், ஏற்று, ஏறு, ஏன் முதலிய ஏகார முதற்சொற்களும்;

ஓ, ஓக்காளம், ஓடு (பெயர்), ஓடு (வினை), ஓடி, ஓங்கு, ஓசை, ஓட்டம், ஓட்டு, ஓட்டி, ஓட்டை, ஓடம், ஓனான், ஓதம், ஓது, ஓமல், ஓய்தல், ஓர்படியாள், ஓரம், ஓரி, ஓலை, ஓவியம் முதலிய ஓகார முதற் சொற்களும்;

அவ்விருயிரும் மெய்யொடுகூடி மூவிடத்தும் வரும் நூற்றுக் கணக்கான சொற்களும், கல்லா மக்களும் வழங்கும் அடிப்படை

யுலக வழக்குச் சொற்களாயிருப்பதை நோக்கும்போது, தி. நா. சுப்பிரமணியனாரின் அறியாமை எத்துணை அளவற்றதென்று கண்டுகொள்க.

முதற்காலத்தில் மாந்தன் வாயில் முதற்கண் தோன்றிய நெடிலுயிர்கள் பின்னர்க் குறில்களாகக் குறுகிய பின்பே மொழி வளர்ச்சியடைந்திருப்பதால், எகர ஒகரக் குறில்களை இருவகையிலும் முதலிலும் மூவிடத்துங் கொண்ட இருவகை வழக்குச் சொற்களும், ஆயிரக்கணக்காகப் பெருகியுள்ளன. ஏகார ஓகார நெடிற் சொற்களினும், எகர ஒகரக் குறிற்சொற்கள் ஏறத்தாழ இருமடங்கு பெருகியிருப்பது கவனிக்கத் தக்கது.

ஆ ஈ ஊ என்னும் நெடில்களையும் அ இ உ என்னும் அவற்றின் குறில்களையும் அமைக்கத் தெரிந்த தமிழர்க்கு, ஏ ஓ என்னும் நெடில்களையும் அவற்றின் எ ஒ என்னும் குறில்களையும் அமைக்கத் தெரியவில்லை யென்பது, முன் பிறந்த மும்மகவையும் வளர்த்த பெற்றோர்க்கு, பின்பிறந்த இருமகவை வளர்க்கத் தெரியாது போயிற்றென்பது போன்றதே.

தொல்காப்பிய முதலதிகார முதலியலாகிய நூன்மரபிலுள்ள 33 குறு நூற்பாவிற்குள்ளேயே, எகர ஏகர ஒகர ஓகாரச் சொற்கள் எங்ஙனம் இயல்பாக வந்துள்ளன என்பதை, பின்வரும் நூற்பாக்களாலும் அடிகளாலும் உணர்ந்து கொள்ளலாம்.

எழுத்தெனப் படுப......
முப்பஃ தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே. (1)

மூப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன. (2)

அஇஉ எஒ என்னும்......
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப. (3)

ஆஈ ஊஏ ஐஓ ஔஎனும்
அப்பா லேழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப. (4)

மூவள பிசைத்தல் ஓரெழுத் தின்றே. (5)
நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி எழூஉதல் என்மனார் புலவர். (6)

கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே. (7)

பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப. (8)

பதினெண் ணெழுத்தும் மெய்யென மொழிப. (9)

மெய்யோ டியையினும் உயிரியல் திரியாது. (10)

மெய்யின் அளபே அரையென மொழிப. (11)

அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே. (12)

அரையளபு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங் காலை. (13)

உட்பெறு புள்ளி யுருவா கும்மே. (14)

மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல். (15)

எகர ஒகரத் தியற்கையும் அற்றே. (16)

புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீ ரியல வுயிர்த்த லாறே. (17)

மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே. (18)

வல்லெழுத் தென்ப கசட தபற. (19)

மெல்லெழுத் தென்ப ஙஞண நமன. (20)

இடையெழுத் தென்ப யரல வழள. (21)

மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை. (22)

டறலள என்னும் புள்ளி முன்னர்க்
கசப என்னும் மூவெழுத் துரிய. (23)

லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும். (24)

ஙஞணந மனவெனும் புள்ளி முன்னர்
தத்தம் இசைகள் ஒத்தன நிலையே. (25)

கசஞப மயவவ் வேழும் உரிய. (26)

ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே. (27)

மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும். (28)

யரழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும். (29)

மெய்ந்நிலை சுட்டின் எல்லா வெழுத்தும்
தம்முன் தாம்வரும் ரழஅலங் கடையே. (30)

ஆஏ ஓஅம் மூன்றும் வினஅ. (31)

அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர். (32)

அகர ஆகார முதற்சொற்களும் இகர ஈகார முதற்சொற்களும் உகர ஊகார முதற்சொற்களும் போன்று அத்துணை ஏராளமாக இல்லாவிடினும், அவற்றிற்கு அடுத்தபடியாக எகர ஏகார முதற் சொற்களும் ஒகர ஓகார முதற்சொற்களும், நூற்றுக்கணக்கினவும் இயற்கையானவும் இன்றியமையாதனவும் பிற்கால நூல்களிற் போன்றே தொல்காப்பியத்திலும் பயின்று வருவனவாகவும் இருக்கும்போது, எகர ஒகரக் குறில்கட்கு மட்டும் ஏன் அதிகப்படி யான புள்ளியிட்டார்கள் என்பது விளங்கவில்லை.

பிறமொழியாளர் காணாத பொருளிலக்கணங் கண்டும் இயலொடு இசை நாடகங்களை இணைத்து முத்தமிழ் புணர்த்தும், எழுநிலச் செய்யுள் யாத்தும், எழுத்தினங்கட்கு உயிர், மெய், உயிர் மெய் என்று பெயரிடுமளவு மெய்ப்பொருளறிவு விஞ்சியும், ஆம்பல் தாமரை வெள்ளம் என்று அடுக்கிய கோடியும் முந்திரி கீழ்முந்திரி இம்மி யென்று நுணுக்கிய பின்னமுங் கணித்தும், உலக முழுதும் வழங்குமாறு எழுநாட்கிழமை வகுத்தும், ஏரணமும் மறையும் இயற்றியும், முக்கரணமுங் கடந்த முழுமுதற் கடவுளைக் கண்டும், தம் தெய்வப் புலமையை வெளிப்படுத்திய குமரித் தமிழர்க்கு, ஆ ஈ ஊ போன்றே ஏ ஓ நெடில்கட்கு அதிகப்படியான வரிவடிவமைக் அறிவில்லாது போயிற்றென்பது, இம்மியும் நம்பத் தக்கதன்று.

சூரசேனி மாகதி முதலிய வடநாட்டுப் பிராகிருத மொழியாளர், ஏகார ஓகாரங்கள் எகர ஒகரமாகக் குறுகுமுன் குமரிநாட்டினின்று வடபாற் சென்றோ, ஏன் (என்) நிலம், ஓன் (உன்-ஒன்) வீடு என்று குறில்களை நெடிலாக்கிப் பேசினதினாலோ, எகர ஒகரம் இல்லாத அல்லது வழங்காத மொழிகளைப் பேசி வந்தனர். மேலை யாசியாவினின்று கி. மு. 2000-இற்குப்பின் இந்தியாவிற்குட் புகுந்த சிறுபான்மைக் கூட்டமான வேத ஆரியரின் மொழி, வழக்கற்றுப் பெரும்பான்மைப் பழங்குடி மக்களின் பிராகிருத மொழிகளுடன் கலந்துபோனதினால், அவரது வேதமொழியான இலக்கிய மொழி யும் எகர ஒகரக் குறில்கள் இல்லாததாயிற்று. மேலையாரிய மொழி களிலெல்லாம் எகர ஒகரக் குறில்கள் தொன்றுதொட்டு வழங்கி வருவதால், வேத ஆரியரின் முன்னோர் மொழியிலும் அவை வழங்கி யிருத்தல் வேண்டும்.

நெடிலுக்குரிய அதிகப்படிக் குறியை எகர ஒகரக் குறில்கட்கு இட்டது போன்றே, ஏனை முந் நெடில்கட்குப் போன்று ஏகார

ஒகார நெடில்கட்குச் சுழிக்குறியிடாமையும்; இயற்கைக்கு மாறுகத் தோன்றுவதால்,

ஏகார ஓகாரத் தியற்கையும் அற்றே;

என்று தொல்காப்பியர் கூறியதைப் பிற்காலத்தார் எகர ஒகரத் தியற்கையும் அற்றே என்று திரித்துவிட்டனர் என்று கொள் வதற்கும் இடமில்லை.

புள்ளி யென்பது குத்து என்றே பொருள்படுவது. புள்ளுதல் குத்துதல், அலகாற் குத்தி (கொத்தி)த் தின்பதனலேயே பறவை புள் எனப்பட்டது.

எழுத்தாணியால் ஏட்டிற் குத்தினல் துளே விழும். அதனல், ஏட்டுப்புள்ளியெல்லாம் சிறு சுழியாகவே யிருக்கும். இச் சுழி ஆகார ஈகாரத்திற்குப்போல் இன்று ஓகார வடிவிற்கு இறுதியில் இடப்பட்டுள்ளது. பண்டை நாளில் ஈகார வடிவும் இறுதியிற் சுழி பெற்ற இகர வடிவாகவே யிருந்தது. அதைப் புதுப்பித்தல் வேண்டும்.

தேவநாகரி தோன்றுமுன் வடமொழிக்குப் பயன்படுத்தப்பட்ட கிரந்தவெழுத்தில் உள்ள ஓகார வடிவு, இன்று தமிழில் உள்ளது போன்றதே. கிரந்தவெழுத்து, தமிழெழுத்தினின்றே திரிந்த தென்பது முன்னரே பன்முறையும் கூறப்பட்டது.

தொல்காப்பியர் கூற்றுக்களிற் சில மறுப்பிற் கிடமானவை. "எகர ஒகரத் தியற்கையும் அற்றே" என்று அவர் சேரநாட்டு வழக்கையே கூறியுள்ளார்; அவர் வாழ்ந்ததும் சேரநாடே. அவர் காலத்தில் அங்ஙனம் வழங்கியிருப்பினும், காலமெல்லாம் அது தொடரவேண்டு மென்னும் யாப்புறவில்லை. அவர் காலமாகிய கி. மு. 6 ஆம் நூற்ருண்டிற்குப்பின் இன்று 25 நூற்ருண்டு கடந் துள்ளது. இலக்கண விலக்கியங்களிலுள்ள தவருன அல்லது பழமைபட்ட கருத்துக்களைத் திருத்துவதற்கு, அதிகாரமுள்ள நூலாசிரியனுக்கு எக்காலத்தும் உரிமையுண்டு. எகர ஒகரம் பற்றிய தொல்காப்பியர் கூற்றையும் நன்னூலார்க்கு முன்பே ஒருவர் மாற்றியிருத்தல் வேண்டும். அதனையே,

"தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்(டு)
எய்தும் எகரஒகரமெய் புள்ளி" (நன். 98)

என்று 13 ஆம் நூற்ருண்டினரான பவணந்தி முனிவர் கூறினர்.

இதன்பொருள், எல்லா எழுத்துக்களின் வடிவும் தொன்று தொட்டு வழங்கி வருவனவே. ஆயின், அக்காலத்தில் (பண்டைக்

காலத்தில்) எகர ஒகர உயிர்களும் அவற்றைக் கொண்ட உயிர் மெய்யெழுத்துக்களும் புள்ளி பெற்றன; என்றே தெள்ளத் தெளிவாகக் கொள்ளக் கிடக்கின்றது. இங்ஙனங் கொள்ளாக்கால், "ஆண்டு.........புள்ளி" என்பது மிகைபடக் கூறலாகவும், சிறிதும் பயனற்றதாகவும் இருத்தல் காண்க. "தொல்லை வடிவின எல்லாம்" என்பதிலேயே, எகர ஒகர மெய் புள்ளிபெற்றமை அடங்கியிருக்க அதனை யேன் மீண்டும் எடுத்துக் கூறவேண்டும்! ஆகவே, தொல்லை வழக்கிற்கும் உள்ள வழக்கிற்கும் வேறுபாடு காட்டவே, பிற்கூற்றெழுந்த தென்க.

இதை நோக்காது, "எல்லா வெழுத்துக்களும் பல்வேறு வகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவினையுடையவாம். அவ் வடிவை யுடையனவாய் வழங்குமிடத்து, எகரமும் ஒகரமும் மெய் களும் புள்ளியைப் பெறும்" என்றுரைத்தார் ஆறுமுக நாவலர். (19 ஆம் நூற்ருண்டு)

இதனையே ஒட்டியுரைத்தார் வை. மு. சடகோபராமானு சாச்சாரியார்.

மயிலைநாதரும், "எல்லாவெழுத்தும் பழையதாக வருகின்ற வரிவடிவினவேயாம்; அவ்விடத்து எகரமும் ஒகரமும் மெய்களும் புள்ளிபெற்று நிற்பனவாம்." என்றே கூறி,

"'ஆண்டு' என்ற மிகையானே, தாது, ஏது என்றற் றொடக்கத்து ஆரிய மொழிகளும்; எட்டு, கொட்டு என்றற் றொடக்கத்துப் பொதுமொழிகளும்; குன்றியாது, நாடியாது, எட்டி யாண்டுளது என்றற் றொடக்கத்துப் புணர்மொழிப் பொருள் வேறு பாடுகளும்; அறிதற்பொருட்டுக் குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற் புள்ளி கொடுப்பாரும் உளரெனக் கொள்க." என்று சிறப்புக் குறிப்பு வரைந்தார்.

இனி, சங்கர நமச்சிவாயரோ, "எல்லா வெழுத்தும் பல்வேறு வகைப்பட வரைந்து வழங்கும் பழைய வடிவினையுடையவாம். அவ் வடிவினவாய் வழங்குமிடத்து, தனித்தும் உடம்பூர்ந்தும் வரும் எகரமும் ஒகரமுந் தனிமெய்களும், இயல்பாய புள்ளியைப் பிற் காலத்து ஒழித்து வரைந்து ஏகார ஓகாரங்களோடும் உயிர்மெய்க ளோடும் ஐயப்பட வழங்கும் வழக்கினை யுடையவன்றி, துணியப் படுந் தொல்லை வடிவினது உறுப்பாய புள்ளியைப் பெறும்." என்று நூற்பாவின் பிற்கூற்றை விளக்குவார் போன்று இடைக்கால நிலை மையைச் சுட்டி விரித்துரைத்தார். இவர் காலம் 18 ஆம் நூற் ருண்டு.

இவரெல்லாம் இவ்வாறு வெவ்வேறு வகையில் ஒரே கருத்துப்பட வுரைக்க, இராமானுச கவிராயரோ வெனின்,

"தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆன்(டு)
எய்தும்ஏ காரம்ஒ காரமெய் புள்ளி"

என்று நூற்பாவையே மாற்றியமைத்து,

"எல்லா எழுத்துக்களும் பலவேறு வகைப்பட எழுதி வழங்கும் பழைய வடிவையே யுடையனவாம். அவ்வாறு வழங்குமிடத்து, ஏகார ஓகாரங்களும் தனி மெய்களும் பழைய புள்ளியைப்பெறும்.

"இவ்வாறு கூறுதலாற் பிற்காலத்தார் அந்தப் புள்ளியை நீக்கிச் சந்தேகப்பட வழங்கிவந்தன ரென்பதாயிற்று.

"வரலாறு :—எ, ஏ; ஒ, ஓ; கெ, கே; கொ, கோ; க், க; ங், ங என வரும். மற்ற வுயிர்மெய்களுந் தனி மெய்களும் இவ்வாறே புள்ளி பெறுமெனக் காண்க. தொல்லாசிரியர் முதலாயினோர்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்றும், "இறந்தது விலக்கல் எதிரது போற்றல்" எனவுங் கூறினமையால், 'ஏகாரம் ஓகார மெய் புள்ளி' பெறும் எனத் திருப்பவேண்டிற்று. என்னெனின், இக்காலத்தார் ஏகார ஓகாரங்களுக்கே புள்ளியிட்டெழுதுவது பெருவழக்காயின மையா லென்க."

என்று உரைவரைந் திருப்பது, பெரிதும் போற்றத்தக்கதாம். இவர் காலம் 19ஆம் நூற்றூண்டு.

முதுகுடுமிப் பெருவழுதி காலத்திற்குப்பின், தமிழ்க் காப்பும் கல்வெட்டுத் தொடர்பும் தமிழத் தமிழ்ப் புலவர் கையினின்று கடந்துவிட்டமையாலும், போற்றுவாரின்றிப் புலவர் மரபு வரவர அருகி வந்தமையாலும், வீரமாமுனிவர் காலத்திற் (18ஆம் நூற்றூண்டு) புலமையில்லாதவர் படியெடுக்கவும் ஓலையெழுதவும் நேர்ந்துவிட்டமையால், குறில் நெடிலாகவும் மெய் உயிர்மெய் யாகவும் படிக்க முடியாவாறும் படிப்பார்க்குப் பொருள் விளங்கா வாறும் தாறுமாறுக எழுதப்பட்டது கண்டு, அம் முனிவர் எகர ஒகரக் குறிலுக்கு மேற் குறுங்கீச்சும் மெய்க்கு மேற்சுழியும் வைத் தெழுதுமாறு ஏற்பாடு செய்தார்.

"நீட்டல் சுழித்தல்
குறின்மெய்க் கிருபுள்ளி"

என்பது அவரது தொன்னூல் விளக்க நூற்பா (12).

இனி, ஏகார ஓகார உயிர்மெய்கட்குக் கே, கோ என்று இரட்டைச் சுழிக்கொம்பு அமைத்ததும் தாமேயென்று அவர்தம் கொடுந்தமிழ் நூலிற் கூறியிருக்கின்றார்.

எகர ஒகரக் குறில்களும் உயிர்மெய்களுமோ, இன்று தொல்காப்பியரின் புள்ளிபெறாதும், வீரமாமுனிவரின் நெடும்புள்ளி (நீண்ட புள்ளி) யென்னும் குறுங்கீச்சுப் பெறாதும், ஏகார வடிவு கீழ்ச்சாய்ப்புக் கீச்சும் ஓகார வடிவு கீழ்ச்சுழியும் பெற்றும், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே ஏனைக்குறில் நெடில்கள்போல இயற்கையாக வேறுபட்ட வடிவங் கொண்டதுபோலத் தோன்றுகின்றன.

இதுகாறுங் கூறியவற்றால், "தொல்லை வடிவின எல்லா எழுத்தும்" என்றும், ஒரு தமிழெழுத்தும் பிராமியெழுத்தினின்றோ வடவெழுத்தினின்றோ தோன்றவில்லை யென்றும், தொல்காப்பியம், இசை நுணுக்கம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் முதலிய கிறித்துவிற்கு முற்பட்ட பண்டை நூல்களெல்லாம் தமிழெழுத்திலேயேயன்றிப் பிராமியெழுத்தில் ஏட்டுச்சுவடிகளில் எழுதப்படவில்லையென்றும், கி. மு. 3ஆம் நூற்றாண்டுப் பிராமிக் கல்வெட்டுப் பண்டைத் தமிழெழுத்திற்குச் சான்றாகாதென்றும், பிராமியெழுத்தும் வடவெழுத்தும் தமிழெழுத்தினின்றே திரிந்தனவென்றும், தமிழே உலக முதல் உயர் தனிச் செம்மொழியென்றும், தெற்றெனத் தெரிந்துகொள்க.

"நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீள்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம்—சீரணவு
காட்டொன் றொழிப்ப இசையாம் அதனளவு
மீட்டொன் றொழிப்ப மிடறு."

"நீண்மரத்தி லொன்றேற நேரிழையார் கூந்தலாம்
பூநெருப்பி லொன்றேறப் பூங்குளமாம்—பேணுங்
கழுத்திலொன் றேற இசையாம் இசையின்
எழுத்திலொன் றேறவாங் காடு"

என்பன, தொல்காப்பியர் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக இடைக்காலத்தெழுந்த மாத்திரைச் சுருக்கம், மாத்திரைப் பெருக்கம் என்னும் சொல்லணிப் பாட்டுக்கள்.

———

*தனக்குவமையில்லாத் தனித்தகை

[பா். வ. சுப. மாணிக்கம்]

ஏதாவதொரு தமிழ் நூல், தமிழ் பற்றிய நூல் வேண்டும் என்றாலும், தமிழ்ப்புலவர் உருவப்படம் வேண்டும் என்றாலும் கழகத்துக்கு எழுதுங்கள் என்ற அளவிற்குக் கழகப் புகழ் தமிழ்நாட்டிலும், அயல் தமிழ் நாட்டிலும், தமிழரிடையேயும் அயல் தமிழரிடையேயும் மண்டிக் கிடக்கின்றது. கழகத்தால் தமிழ் வளர்ந்தது; தமிழால் கழகம் வளர்ந்தது என்ற சதுரப்பாடு நாடறியும்.

திட்டமிட்டுத் தமிழை வளர்த்தது கழகம். புற அழகு வளர்த்துத் தமிழ் ஏட்டினை வனப்பித்தது கழகம்; சொற்பொழிவு மாநாடுகள் கூட்டிப் புத்திலக்கியம் கண்டது கழகம்; விற்பனை பாராது, தமிழ் விலையற்றது என்ற கற்பனையில் எந்த நூல்களையும் பதிப்பித்த துணிவுடையது கழகம். ஆங்கிலப் பதிப்பு நிலையங்கள் தமிழ் நாட்டிலிருந்தும் தமிழ் பற்றிய நுண்ணிய ஆங்கில நூல்களை வெளியிட விரும்புவதில்லை. உலகிடைத் தமிழ் பரப்பும் விழைவோடும், ஆங்கிலத்தில் தமிழை எழுதுவோரை ஊக்கும் உணர்வோடும் இவ் வகை ஆங்கிலப் பனுவல்களை உலகத் திருமேனி வனப்பில் பதிப்பித்தது கழகம்.

திருக்குறள் எல்லார்க்கும் பொதுவாதல் போல எல்லா ஆசிரியர்க்கும் இடங்கொடுக்கும் பொதுக் கழகம் இக் கழகம். செந்தமிழே தமிழ் என்ற ஒருயிர்க் கொள்கையை எந்நிலையிலும் போற்றி இன்றுவரை மறைமலையத்தை—தூயதமிழைக் கட்டிக் காப்பது நம் கழகம். பள்ளி நூலா, சிறுவர் நூலா, விளக்க நூலா, உரை நூலா, உரைநடை நூலா, சிற்றிலக்கியமா, சங்க இலக்கியமா, பேரிலக்கணமா, எந்த நூலினத்தைக் கழகம் வெளியிடவில்லை? கழகம் பதியாத தமிழ் நூல்வகை ஒன்று உண்டுகொல்?

கழகத்தின் இப் பெரிய சிறப்புக்கு அரிய பெரியார் ஒருவர் உளர்; என்றும் தமிழ் நினைப்பினர்; தூய தமிழ் எண்ணத்தினர்; தமிழே போல் தமிழ்ப்புலவர் உருவங்களைப் போற்றுபவர்; தமிழ்த் திட்டம் கற்பனையில் வகுத்து, வகுத்தபடி செயல் கண்டு வருபவர். தமிழ்மை யுடையனவற்றைத் தொகுத்து வகுத்துப் பதிப்பதில் தனக்குவமையில்லாத் தனித்தகை. அவர்தாம் தாமரைச் செல்வர் தமிழ்த்திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள்.

தமிழுக்குப் பின்தான் கழகம் தோன்றியது என்றாலும் தமிழோடு ஒப்பக் கழகம் என்றும் வாழ்வதில், 1,500 நூற் குழந்தைகளை ஈன்ற கழகக் காதலர் திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் நூற்றிதழ் அலரி நிரை கண்டாற் போல, நூறு பல்லாண்டு உரையும் பாட்டும் உடையோராய் வாழ்கதில்.

---

*கழக ஆட்சியாளரின் பவள விழாவின்போது வழங்கிய வாழ்த்துரை.

வள்ளலார் வகுத்த
சுத்த சன்மார்க்கம்

[டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

(முன் இதழ் உகூசூஆம் பக்கத் தொடர்ச்சி)

"இத் தேகத்தையே நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும்; இத்தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கு அறிவித்த வண்ணமே அறிவித்து அவரவர்களையும் உரிமையுடையவர்களாக்கிவிட வேண்டும்" என்று வரும் வள்ளலார் உபதேசம், தனிப்பெருங்கருணை உள்ள அவரது திருவுள்ளத்திற்குச் சான்று பகர்கின்றது.[42]

மரணமிலாப் பெருவாழ்வை அடைய முயலும் சன்மார்க்க நெறியாளனுக்கு வள்ளலார் வழங்கும் மறைமொழிகள் : பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்ற மூன்றும் ஆகும். இம்மூன்று நெறி நின்றால் ஆண்டவனைப் பற்றிய மனமொன்றிய பிரார்த்தனைக்கு இடம் உண்டாகும் என்பது அடிகளார் கருத்து.

"கற்ற தென்றும் சாகாத
கல்வியென்று கண்டு கொண்டுன்
அற்புதச் சிற்றம்பலத்தில்
அன்பு வைத்தேன் ஐயாவே"
"வாடலறச் சாகா
வரங்கொடுக்கும் என்று மன்றில்
ஆடலடிப் பொன்மலர்க்கே
அன்புவைத்தேன் ஐயாவே"

என்று மனமுருக வேண்டிய அடிகளார் இறவா வரம் பெற்று விட்டதாகச் செம்மாந்துபாடும் இடமும் உண்டு.[43]

"கட்டமும் கழன்றேன் கவலைவிட் டொழிந்தேன்
கலக்கமும் தீர்ந்தனன் பிறவிக்
கட்டமும் கிழித்தேன் தூக்கமும் துறந்தேன்
சாவையும் நோயையும் தவிர்ந்தேன்

---

42. திருவருட்பா-திருநெறிக்குறிப்புக்கள்.
43. 6-பேரின்பக் கண்ணீர்-1. 4.

சிட்டமும் அடைந்தேன் சிற்சபை உடையான்
செல்வமெய்ப் பிள்ளையென் றொருபேர்ப்
பட்டமும் தரித்தேன் எனக்கிது போதும்
பண்ணிய தவம் பலித்ததுவே''[44]

''கற்றேன் சிற்றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணைநெறி
உற்றேன்எக் காலமும் சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம்
பெற்றேன் உயர்நிலை பெற்றேன் உலகில் பிறநிலையைப்
பற்றேன் சிவானந்தப் பற்றேஎன் பற்றெனப் பற்றினனே.''[45]

இவ்வாறு உள்ளொலி அனுபவம் பெற்ற வள்ளலார், தம் முள்ளத்தே எல்லாம் வல்ல ஆண்டவன் சன்மார்க்க நெறிவழியே தமக்கு எய்துவித்த பேரின்ப அனுபவத்தினை எண்ணி எண்ணி வழிபடுகின்றார்: ''என்சாமி எனதுதுரை என்உயிர் நாயகனார் இன்று வந்து நானிருக்கும் இடத்தில்அமர் கின்றார், பின்சாரும் இரண்டரை நாழிகைக்குள்ளே எனது பேருடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார், தன்சாதி உடையபெருந் தவத்தாலே நான்தான் சாற்றுகின்றேன் அறிந்ததிது சத்தியம் சத்தியமே, மின்சாரும் இடைமடவாய் என்மொழி நின்றனக்கே வெளியாகும் இரண்டரை நாழிகை கடந்த போதே''[46] ''இறவா வரமளித் தென்னை மேல் ஏற்றிய அறவாழியாம் தனி அருட்பெருஞ்சோதி''[47] ''சாவா நிலையிது தந்தனம் உனக்கே ஆவா எனவருள் அருட்பெருஞ் சோதி''[48] எனவரும் அருட்பெருஞ்சோதியகவல் வரிகளும், ''இறவாமையீந்தானென் றூதூது சங்கே! எண்ணம் பலித்ததென் றூதூது சங்கே! சிவமாக்கிக் கொண்டானென் றூதூது சங்கே'' எனவரும் சங்கொலிக் கவிதைகளும்[49] ''அருட்சோதி யானேனென் றறையப்பாமுரசு, அருளாட்சி பெற்றேனென் றறையப்பா முரசு, மருட்சார்பு தீர்ந்தேனென் றறையப்பா முரசு, மரணம் தவிர்ந்தேனென் றறையப்பா முரசு'' எனவரும் முரசொலிக் கவிதைகளும்[50] வள்ளலார் சாகாநிலை பெற்றமைக்குச் சான்று பகர்கின்றன. கருமசித்தி, யோகசித்தி, ஞானசித்தி என்று கூறப்படும் சித்திகளை அடிகளார் குறிப்பர். இவற்றையெல்லாம் தாம் பெற்றவர் ஆதலின் அக் குறிப்பைத் தம் அமுத வாக்குகளின் இடையே சுட்டுவர்.

---

44. 6 சிவபுண்ணியப் பேறு-10.
45. 6 வேண்டுகோள்-9.
46. 6 வருதருணப் பாடல்-4.
47. 6 அருட்பெருஞ்சோதி அகவல்-157-158.
48. மேற்படி அகவல்-209-210.
49. 6-ஆனந்த மேலீடு 10.
50.

இறையருள் வேண்டல் :

சமூக வாழ்வில் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் ஒத்தாரும் ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உணர்வு கொண்டு வாழவேண்டும் என்று அடிகளார் இறைவனிடத்தில் வேண்டுகின்றார்.

''ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமை யுளராகி யுலகில் நடத்தல் வேண்டும்''[51]

''அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்''[52]

''உன்னுடி உயிர்களுறுந் துயர் தவிர்த்தல் வேண்டும்''[53]

''இருளாமையுறல் வேண்டும் எனையடுத்தார் சுகம் வாய்ந்திடல்
வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்.''[54]

தமது சிறுமையை அடிகளார் விரித்துரைத்து, இறைவனின் திருவருள் வேட்கும் பதிகங்களாக, நெஞ்சறி வுறுத்தல், பிள்ளைச் சிறு விண்ணப்பம், பிள்ளைப் பெரு விண்ணப்பம், ஆற்றாமை, சத்தியப் பெருவிண்ணப்பம் முதலியவற்றைக் கூறலாம். சத்திய ஞான விண்ணப்பம் என்ற பகுதியில் இறைவனின் பேரருளை அடைந்த உண்மை ஞானிகளின் சித்தி வல்லபங்களை எழுவகைப் படுத்து இயம்புவர். 1. சுத்த வேதாந்தர். 2. சுத்த சித்தாந்தர். 3. சுத்த யோகாந்தர். 4. சுத்த நாதாந்தர். 5. சுத்த போதாந்தர் 6. சுத்த காலந்தர், 7. சுத்த சன்மார்க்க ஞானியர்.

சன்மார்க்க அனுபவங்கள் :

சன்மார்க்கமாகிய உண்மைநெறியைக் கடைப்பிடிப்போர் எய்தும் அனுபவங்களை அடிகளார் மூன்றுவகையாக மொழிவர். உயிரனுபவம், அருளனுபவம், சிவானுபவம் என்பன அவை. ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையில் இதனை அடிகளார் அருளுவர்:[55]

''பொத்திய மூல மலப்பிணி தவிர்க்கும்
பொருளரு ளனுபவ மதற்குப்

51. 6 சுத்தசன்மார்க்க வேண்டுகோள்-4.
52. 6 சுத்தசன்மார்க்க வேண்டுகோள்-1.
53. 6 ,, ,, 3.
54. 6 ,, ,, 10.
55. 4 ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை-6.

பத்தியம் உயிரின் அனுபவம் இதனைப்
 பற்றறப் பற்றுதி யிருவே
சத்தியம் எனவென் றனக்கருள் புரிந்த
 தனிப்பெருங் கருணையென் புகல்வேன்
முத்தியற் சிவிகை யிவர்ந்தருள் நெறியின்
 முதலர சியற்றிய துரையே.''

மூலமலப்பிணி தவிர்க்கும் மருந்து அருளனுபவம் என்பதும், அதனைப் பெறுதற்குப் பத்தியமாக உயிரனுபவம் உள்ளது என்பதும், அருள்நெறியில் முதல் அரசு இயற்றிய திருஞானசம்பந்தப் பெருமான் கருணையொடும் தமக்கு அறிவுறுத்திய உண்மை இது என்பதும் வள்ளலார் இத் திருப்பாட்டில் உரைக்கும் உண்மை ஆகும்.

''உயிரனுபவம் உற்றிடில் அதனிடத்தே
 ஓங்கருள் அனுபவமுறும் அச்
செயிரின லனுபவத்திலே சுத்த
 சிவவனுபவ முறும் என்றாய்''
''தத்துவ நிலைகள் தனித்தனி
 ஏறித் தனிப்பர நாதமாந் தலத்தே
ஒத்து அதன் மயமாய் நின்னை
 நீயின்றி உற்றிடல் உயிரனுபவம்''

என்பன அடுத்து இரண்டனுபவங்களைப் பற்றிய இலக்கணம் தெரிவிக்கும் பாடல்கள்.[56] மலரோன் தத்துவம், மாலோன் தத்துவம், சுத்த தத்துவம் என்ற மூவகைத் தத்துவங்கள் சுத்த சன்மார்க்கத்தில் கூறப்படுகின்றன. மலரோன் தத்துவம் பிரமதத்துவம் எனப்படும் இருபத்து நான்காம் மாலோன் தத்துவம் ஏழாம்; சுத்த தத்துவம் முப்பத்தாறும்.

இத் தத்துவங்களைத் தன்வசமாகச் செலுத்த அறிவதே தத்துவங்களைக் கடத்தற்கு உரிய வழியாகும்.

''தத்துவ மனைத்தும் தவிர்த்துநான் தனித்த
 தருணத்திற் கிடைத்ததொன் றென்கோ
தத்துவ நிரம்பும் சுத்தசன் மார்க்கந்
 தனிலுறு மனுபவ மென்கோ[57]

ஒத்துவந் தெனைத்தான் கலந்து கொண்டெனக்குள் ஓங்கிய ஒருமையேயென்கோ என்பர் அடிகளார்.

---

56. மேற்படி மாலை-2, 3.
57. 6-54-1.

"தத்துவ மனைத்தும் தனித்தனி கடந்தேம்
தத்துவா தித மேல் நிலையில்
சித்தியல் முழுதும் தெரிந்தனம் அவைமேற்
சிவநிலை தெரிந்திடச் சென்றேம்
ஒத்தவந் நிலைக்கண் யாமுமெம் உணர்வும்
ஒருங்குறக் கரைந்துபோ யினமென்று
அத்தகை உணர்ந்தோர் வழுத்தநின் றோங்கும்
அருட்பெருஞ் சோதியென் னரசே"[58]

என்று கூறி உருகுவர். பிறிதோரிடத்தில் தத்துவங்களைக் கடத்தற்குத் தத்துவநிலைகளை மறைத்து நிற்கும் திரைகள் நீங்க வேண்டும்.

"தத்துவ நிலைகளைத் தனிதனித்
திரையால் அத்திறமறைக்கும் அருட்பெருஞ்சோதி"

என்பர் வள்ளலார்.[59]

இவ்வாறு திரைமறைப்பைத் தீர்த்து அருள்வழங்குதலும், தத்துவங்களால் வரும் துன்பங்களை நீக்குதலும்' எல்லாம் வல்ல ஆண்டவனால் தான் கூடும். நாதம் வரையுள்ள சுத்த தத்து வங்களை யெல்லாம் விட்டகன்றபிறகு அருளைக் காணுதலும், அருளால் தம்மைத்தாம் காணுதலும் நிகழும் என்பர்; இதுவே உயிரனுபவம் என்று கூறப்படும்.

அருளனுபவத்தை ஞானசம்பந்தர் வாயிலாக ஆண்டவன் வள்ளலார்க்கு அருளினன் என்பதை முன்னர்க் குறித்தோம்

"தனிப்பர நாத வெளியின்மேல் நினது
தன்மயம் தன்மய மாக்கிப்
பனிப்பிலா தென்றும் உள்ளதாய் விளங்கிப்
பரம்பரத் துட்புற மாகி
இனிப்புற ஒன்றும் இயம்புறு
வியல்பாய் இருந்ததே"

அருளனுபவம் என்கிறது திருவருட்பா.[60]

இனி, அருளனுபவத்தில் விளைவதே சிவானுபவம், உள்ள தாய் விளங்கும் ஒரு பெருவெளிமேல் அனுபவம் ஆவது சிவா னுபவம், சிவவெளி, வெறுவெளி, பெருஞ்சுக வெளி, சுகப் பெரு

58. 6-4-7.
59. 6-1-829.
60. 4-9-4.

வெளி என்றெலாம் அடிகளார் உரைப்பது இதனையே ஆம். முற்று முள்ளது; எங்குமாய் விளங்குவது; "இது வதுவென உரைப் பரிதாய்" உள்ள ஓர் இயற்கைத் தனியனுபவம். அண்ணித்து இனிப்பது; எனதாய்த் தானதாய், நானதாய், நவிற்றருந் தான தாய் இருப்பது; சொல்லற்கரிய படிகளைக் கடந்துள்ள இவ் வெறு வெளியே சிவானுபவம் என்று ஞானசம்பந்தப்பிள்ளையார் தமக்கு அறிவுறுத்தியதாக வள்ளலார் உரைப்பர்;[61]

"உள்ளதாய் விளங்கும் ஒருபெரு வெளிமேல்
உள்ளதாய் முற்றுமுள் ளதுவாய்
நள்ளதாய் எளதாய் நாளதாய்த் தனதாய்
நவிற்றருந் தானதாய் இன்ன
விள்ளொணு அப்பால் அப்படிக்கு அப்பால்
வெறுவெளி சிவானு பவம் என்று
உள்ளுற வளித்த ஞானசம் பந்த
உத்தம சுத்தசற் குருவே."

இந்த சன்மார்க்க இலட்சியத்தை அனுபவித்த அனுபவ விளக்கத்தை அடிகளார் எண்ணற்ற இடங்களில் கூறிமகிழ்ந்து உருகுவர்:[62]

"அருட்பெரு வெளியில் அருட்பெரு வுலகத்து
அருட்பெருந் தலத்துமே னிலையில்
அருட்பெரும் பீடத்து அருட்பெரும் வெளியில்
அருட்பெருந் திருவிலே அமர்ந்த
அருட்பெரும் பதியே."

"வெளியே எவ்வெளியும் அடங்குகின்ற வெறுவெளியே"[63]

"திருநிலைத் தனிவெளி சிவவெளி எனுமோர்
அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ் சோதி"[64]

"வெளிக்குள் வெளிகடந்து சும்மா இருக்கும் சுகம்"[65]

"நானுனன் தானுனன் நானும் தானுமானன்"[66]

---

61. 4 ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை-5.
62. 6-4-1.
63. 6-56-11.
64. 6-1-27.
65. திருவருட்பா நான்முகம்.
66. 6-124-1.

''தானே யருளானுன் தானே பொருளானுன்
தானேயெல் லாம்வல்ல தானுனன்—தானே தான்
நானுனன் என்னுடைய நாயகனு னன்ஞான
வானுனன் அம்பலத்தெம் மான்''[67]

எப்பொருளும் எவ்வுயிரும் எவ்வுலகும்
விளங்க விளக்கிடுவான் தன்னைச்
செப்பரிய பெரியவொரு சிவபதியைச்
சிவகதியைச் சிவபோ கத்தைத்
துப்புரவு பெறவெனக்கே அருளமுதம்
துணிந்தளித்த துணையை யென்றன்
அப்பனைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ
தியைப் பெற்றே னச்சோ அச்சோ''[68]

முதலிய இடங்களை இந்த நோக்கிற் கண்டுணர்ந்து இன்புறலாம். சிவானுபவம் பெற்றவர்கள் அறிவு கடவுளறிவாகவும் செய்கை கடவுட் செய்கையாகவும் இருக்கும். சைவசித்தாந்த சாத்திரங்கள் இதனைத் தெளிவுறுத்துகின்றன. பசுகரணங்கள் பதிகரணங்களாக மாறி விடும் நிலை இதுவே என்று கூறுவது பொருந்தும்.

''பொன்னுருத் தந்தானென் றூது சங்கே
சிவமாக்கிக் கொண்டானென் றூது சங்கே''[69]

''தன்னுரு என்னுரு தன்னுரை என்னுரை
என்னவியற்றிய என்றனித் தந்தையே''[70]

''தன்னையும் தன்னருட் சத்தியின் வடிவையும்
என்னையும் ஒன்றென வியற்றிய தந்தையே''[71]

எனவரும் வள்ளலார் வாக்குக்கள் நோக்கத்தக்கன. ''எனதுரை தனதுரையாக'' எனவரும் ஆளுடைய பிள்ளையாரின் திருவாக்கும், ''நீயாகி நானாகி'' என வரும் ஆளுடைய அரசு திருவாக்கும் இங்குக் கருதற்குரியன.

(தொடரும்)

---

67. 6-86-5.
68. 6-47-3.
69. 6-166-5, 6.
70. 6-1-1150.
71. 6-1-1145.
72. திருஞானசம்பந்தர் தேவாரம்.

அழிவுக்கு வழிகோலும் மொழிவெறி வேண்டாம்

குடியரசுத் தலைவர் உயர்திரு நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்கள் 14-2-79 அன்று தெற்கு தில்லியில் மோதிலால் நேரு கல்லூரிக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டியபோது, அவ் விழாவில், அக் கல்லூரி முதல்வரும், விழாவில் கலந்து கொண்ட பெரு மக்கள் பலரும் இந்தி மொழியிலேயே உரையாற்றினர். அது கண்டு மனம் பொருத குடியரசுத் தலைவரவர்கள் தம்முடைய உரையைத் தம்முடைய தாய் மொழியாகிய தெலுங்கில் துவக்கிப் பேசிவிட்டுப், பின்னர் ஆங்கிலத்தில் உரையாற்றினார். அவ்வுரைச் சுருக்கம் வருமாறு.

"இப்போது நான் குறிக்கோளுடன்தான் தெலுங்கில் என் உரையைத் துவக்கினேன். ஏனெனில் என் தாய்மொழியிடம் நான் பற்றுக் கொண்டுள்ளேன். அதனைத் தவறு என்று யாரும் சொல்ல முடியாது. மொழி குறித்து நம்மிடையே நிலவும் குறுகிய மனப் பான்மை எவ் வகையிலும் நம்முடைய முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக இருக்கக் கூடாது.

இக் கல்லூரி முதல்வர் இந்தியில் பேசினார். அவர் என்ன பேசினார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் என்ன பேசினார் என்பதைப் புரிந்து கொண்டிருப்பேனாயின், உங்களுடைய பணிகளைப் பாராட்டி என்னால் பேசியிருக்க முடியும்.

அனைவருக்கும் உங்களுடைய முதல்வர் என்ன பேசினார் என்பது தெரிய வேண்டாமா? மற்றவர்களுக்குப் புரிந்தாலும் புரியா விட்டாலும் குற்றமில்லை; அழகான இந்தியில் பேசினால் போதும் என்று அவர் தமக்குத் தாமே மனநிறைவு பெற்று விட்டால் அது மட்டும் போதுமா?

இதனை நான் பெரிதும் மனம் நொந்து கூறுகிறேன். நாம் மெல்ல மெல்ல, குறுகிய மனப்பான்மைக்கு ஆளாகிக் கொண்டு வருகிறோமோ என்றும் அஞ்சுகிறேன்.

அண்மையில் நான் மிசோராம் மாநிலத்தில் சுற்றுப் பயணம் செய்த போது அங்கே கறுப்புக்கொடி காட்டினார்கள். அனைத் திந்திய போட்டித் தேர்வுகளில் அவர்கள் தங்களுடைய தாய் மொழியில் எழுத முடியவில்லை என்பதற்காக அவர்கள் ஒரு போராட்டமே நடத்துகிறார்கள். அரசியல் அமைப்புச் சட்டத்தின் எட்டாவது பிரிவில் 'மிசோ' மொழி சேர்க்கப்படவில்லை. மிசோ

மக்கள் நல்லவர்கள். அவர்களின் குறை நியாயமானதே. ஆனால் இப்படிப்பட்ட சிக்கல்கள் பற்றி யாரும் கவலைப் படுவதாகத் தெரிய வில்லை. இப்படிப்பட்ட சிக்கல்கள் பற்றி நான் தலைமை அமைச்ச ருடன் கலந்து பேசலாம் என்று கருதுகிறேன்.

நம்மிடையே பலமொழிகள் பல்வேறு கலை, பண்பாடுகள் இருப்பினும் இந்தியா ஒன்றுபட்டதொரு நாடாகும். ஆனால், தீவினைப் பயனாக இந் நாட்டு இளைஞர்களின் சிந்தனையோட்டம் சின்னஞ் சிறு செய்திகளையே நாடிச் செல்கின்றது. அப்படிச் செல்லுமானால், அதன் விளைவாக நாடு பல துண்டுகளாகப் பிரிந்து போகுமானால், இந் நாட்டின் எதிர்கால வரலாறு துன்பம் நிறைந்த துயரவரலாறாக ஆகிவிடாதா?

என்னைப் பொறுத்த வரை, என்னிடம் மொழிச் சிக்கல் ஏதும் இல்லை, நான் மொழி வெறியனும் அல்லன், நான் நாடாளு மன்ற அவைத் தலைவனாக இருந்தபோது உறுப்பினர்கள் இந்தியில் பேசுவதைப் பலமுறை கேட்டிருக்கிறேன். தலை சிறந்த இந்திப் புதின நூலாசிரியர் பிரேம்சந்து அவர்கள் எழுதிய இந்தி புதினங்களை நான் படித்திருக்கிறேன். நான் ஓர் இந்தியன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகிறேன்.

நம்முடைய குறிக்கோள் நம் தாயகம் மேலும் மேலும் சிறப்புற வேண்டும் என்பதாக இருக்க வேண்டும். மண்ணில் வாழும் நம்மை யெல்லாம் மனிதராக்கியவர் மகாத்மா காந்தி. அந்த மண்ணில் கிளர்ந்தெழுந்த ஒருவன்தான் நான்.

இப்பொழுது நான் இக் கட்டிடத்தின் அடிக்கல்லை நாட்டி விட்டேன். இதைக் கட்டி முடிக்க வேண்டிய பொறுப்பு இளந் தலைமுறையினரைச் சேர்ந்தது. ஆனால், மொழியை அடிப்படை யாக வைத்து, நீங்கள் இக் கட்டிடத்தைப் பல துண்டுகளாகப் பிரித்து விடுவீர்களாயின், இப் பிளவுகளே நம் நாட்டை அழித்து விடும்.

———

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும். —குறள், 447

உள்ளதை இழக்க ஒருபோதும் ஒருப்படோம்

[பேரறிஞர் அண்ணு]

நமது தமிழ்மொழி தொன்மை மிக்கது; மென்மை மிக்கது; வளம் பெற்றது; வலிமை பெற்றது; வலிவும் பொலிவும் வாய்ந்தது. தானும் வாழ்ந்து பிற மொழிகளையும் வாழ வைத்தது தமிழ். பல மொழிகளுக்குத் தாயகமான, அத்தகைய தமிழை - தமிழின் சிறப்பைப் பல பகுதிகளிலும் உள்ளோர் ஓரளவு அறிந்துள்ளார்கள். பெருமளவு, முழு அளவு தமிழின் சிறப்பை, மாண்பை உலகம் ஒப்புக் கொள்ளும் அளவுக்கு, ஆவன செய்ய இந்த மாநாடும், மாநாட்டில் நடக்கும் ஆராய்ச்சியும் உதவும் என நம்புகிறேன். இத் தமிழ் ஆராய்ச்சியால் புதிய கட்டம், நல்ல கட்டம் ஏற்படுத்தப் படும் என நம்பலாம் இந்த ஆராய்ச்சியின் பயன், பல காலமும் தமிழ் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும், தமிழர் வாழ்வுக்கும் வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் பேசுகையில் முதல் மாநாட்டையே இங்கே நடத்தி யிருக்க வேண்டும் என்ருர். உண்மைதான்; ஏனோ அந்த வாய்ப்பு கிட்டாமல் போயிற்று. மலேசியாவில் நடந்த முதல் மாநாட்டில் 20 வெளி நாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 2-வது மாநாட்டிற்கு 30 க்கும் மேற்பட்ட வெளி நாட்டினர் கலந்து கொண்டுள்ளனர். ரஷ்யா, செக்கோஸ்லோவேகியா, ஆஸ்டிரியா, ஹங்கேரி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து ஆராய்ச்சி வல்லுநர்கள் சென்னை வந்துள்ளனர்.

இத்தனை நாடுகளுக்கும் அறிமுகமாயுள்ள தமிழ்மொழி இந்தியாவுக் குள்ளேயே இன்னும் பல பகுதிகளில் இடம் பெற முடியாமலிருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். செக்கோஸ்லோவேக்கியாவில் தமிழ்மொழி வியந்து பாராட்டப்படுகிறது. அமெரிக்கர்கள் அறிந்து போற்றுகின்றனர். பிரிட்டிஷ் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிற்றுவிக்கப் படுகிறது, என்றெல்லாம் உணரும்போது, உணர்ச்சியால் விம்மும் நமது உள்ளம் நம்மை எங்கே யெல்லாமோ இட்டுச் செல்கிறது. இன்றுள்ள நிலையை எண்ணும்போதுதான் இருக்கின்ற இடத்திற்கு வருகிறோம். தமிழர், தமிழ்ப் பண்பாட்டை—தமிழ் வரலாற்றை அறிந்து ஆற்றலுடன் அறிவுடன் ஒன்றுபட்டுப் பெரும் முயற்சி செய்தால் நிச்சயம் அந்த இடத்திற்கும் நாம் செல்வோம்.

உலகில் மொழிஅறிவு தோன்றியிராத காலத்தில், மொழி இலக்கியம், மொழிஇலக்கணம் பெற்றிருந்தது தமிழ். எட்டுத்

தொகை என்றும், பத்துப் பாட்டு என்றும், பதினெண் கீழ்க்கணக் கென்றும் பெற்றிருந்தோம்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு உணர்த்தும் குறளுக்குச் சொந்தக்காரர்களாக நாம் இருந்தோம். அத்தகைய தமிழுக்குப் புதிய வலிவும் பொலிவும் இந்த மாநாட்டினரால் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டில் நடந்த—நடக்கின்ற அரிய நிகழ்ச்சிகளைக் கண்டும், தமிழ் ஆராய்ச்சி, கருத்தரங்கு உரைகளின் சிறப்பைக் கேட்டும் புதுப் பயன் பெறலாம்.

நாம் அடைந்துள்ள இந்த அகமகிழ்ச்சி, மற்றவர்கள் கருதுவதுபோல இல்லாமல், தமிழ் வளம்பெற, தமிழ் வளர்ச்சியுற வேண்டிய வழியினை, வகையினைக் காணப் பயன்படுத்தப்படும் என உறுதி கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது தாய்மொழி பற்றி நடக்கும் ஆராய்ச்சிகளையும், முடிவு களையும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்வோம் என்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்வோம்.

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும்—தன் னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்த மொழியையும், உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் எந்தக்கோடியில் இருந்தாலும் தேடிச்சென்று எடுத்து வரும்!

ஆனால்...தமிழர்கள் தமக்கென்று உள்ளதை இழக்க ஒருக் காலும் சம்மதிக்க மாட்டார்கள்.

இங்கிலாந்திலிருந்தும், பிறநாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள், தமிழ்மொழி இத்தகைய அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில்—அந்த மொழிக்குச் சொந்தக்காரர் என்று நினைக்கும்போது, அந்த மொழிமீது பற்று—பாசம் ஏற்படாமலா இருக்கும்?

அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது—எந்த நோக் குடனாவது—எப்படிப்பட்டவர்களிட மிருந்தாயினும் தனி மரியாதை கிடைக்கவில்லை யென்றால், அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது. ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டுதானிருக்கிறது. பக்குவமாகக் கடக்கவேண்டுமானால், நல்ல நாவாயின்—கப்பலின் மூலம் கடக்கலாம்.

அதுபோலத் தமிழர்களை அணைத்துக்கொண்டு சென்ருல், அவர்களைவிடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது.

ஐக்கியநாடுகள் சபையில் ஒற்றுமையைக் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றினுலும்—அனைத்து நாட்டுக் கொடிகளும் வெளியே பறக்க—உள்ளே பேசிவிட்டு வெளியே வந்தாலும், எந்த நாட்டின்மீது யார் படையெடுப்பார்களோ என்ற பேச்சும் இருக்கும்! தீதும் நன்றும் பிறர்தர வாரா.

ஆனல், உண்மையான ஒற்றுமை உணர்வினை ''யாதும் ஊரே; யாவருங் கேளிர்'' என்ற பொன்மொழியில் வடித்து, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தந்த தமிழரின் பெருந்தன்மையை எண்ணி எண்ணி நெஞ்சம் விம்முகிறது.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பாடிய புலவர், ''தீதும் நன்றும் பிறர்தர வாரா''—என்று அடுத்த அடியில் பாடியிருக்கிருர்.

நல்லது வரவேண்டுமா? அது நாம்தான் செய்துகொள்ள வேண்டும். கெட்டது வரவேண்டுமா? நாம்தான் வரவழைத்துக் கொள்ளவேண்டும்! எனவே, தீது வருமோ என்று ஐயப்பாடு கொள்ளவேண்டாம். தமிழருக்குத் தீது, பிறர் தருவதால் அல்ல—நாமே தீது தேடிக் கொண்டாலொழிய, தமிழர்களுக்குத் தீது ஒரு போதும் வராது.

தமிழ்மொழியின் அருமை பெருமையை நாம் உணர்வதோடு பிறரும் உணர்ந்து, தமிழர்களாகிய நம்மை அவர்கள் நோக்கி, இந்தத் தமிழ்மொழி உங்களுக்குமட்டும் உரியமொழியன்று. எங்களுக்கும் அதுதான் மொழி; அதுதான் இணைப்பு மொழி. அதுதான் பொது மொழி; அதுதான் ஆட்சிமொழி என்று கூறும் காலம் வரும்! அந்தக் காலம் அவசர நடையால் வருவதன்று. அவசரக் கோலத்தில் கிட்டுவதன்று.

தூண்டில் போடுபவன், முள் அருகில் மீன் வரும்வரை எப்படிப் பொறுமையுடன் இருப்பானே, அத்தகைய பொறுமையை நாம் கைக்கொள்ள வேண்டும். தமிழ்மறையிலும் தமிழ் நெறியிலும் காலம்—இடம்—வகை—பொருள் அறிந்து செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்தவழி நடந்து, தமிழ்மொழியை அரியாசனத்தில் அமர்த்திடக்கூடிய நன்னளை நாம் உருவாக்குவோம்.

—1968 சனவரியில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் **பேரறிஞர் அண்ணு** *அவர்கள் ஆற்றிய தலைமையுரை.*

இந்தித் திணிப்பு நீதியாகுமா?

[முதறிஞர் இராசகோபாலாச்சாரியார்]

எல்லா மக்களும் சம வாய்ப்புகள் பெற்றிருக்க வேண்டும், ஏற்றத் தாழ்வுகள் இருக்கக்கூடாது என்பதுதான் நம்மை ஆள்கிற ஆட்சியின் சோசலிச தாரக மந்திரம்! ஆனால், ஆட்சிமொழி விஷயத்தில் மட்டும் இதற்கு முழுவதும் நேர்மாறாக இதுவரையில் இல்லாத ஏற்றத் தாழ்வுகளைப் புதிதாக உண்டாக்கி இருக்கிறார்கள். இந்தியை ஆட்சிமொழியாக்குவதால் தென்னாட்டில் உள்ள கோடிக் கணக்கான மக்களை ஒரே வீச்சில் இந்திமொழிக்காரர்களுக்குச் சமமான வாய்ப்பில்லாமல் செய்திருக்கிறார்கள்.

''இந்தி நம் மக்களின் மொழி, அரசினர் மொழியும் மக்களின் மொழியும் ஒன்றாக இருக்க வேண்டும்'' என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால், இந்தி எந்த மக்களின் மொழி? நாடு முழுவதும் உள்ள மக்களின் மொழியா அது? இல்லை; தென் இந்தியாவிலுள்ள படித்தவர் படிக்காதவர் யாருமே அந்த மொழியைப் பேசவில்லை. புரிந்துகொள்ளவும் மாட்டார்கள். வட இந்தியாவில் அடுத்தடுத்து உள்ள நாலு ராஜ்யங்களின் மொழி தான் அது. சதவீதக் கணக்குகள் எப்படியானாலும், இந்தி பேசுவோர் நாடு முழுவதும் பரவி இருக்கவில்லை. ஒரே பிரதேசத்தில் தான் குவிந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாஷையை ஆட்சி மொழியாக்குவதால் நாட்டின் ஒரு பகுதியில் உள்ள மக்கள் மற்றப் பகுதியிலுள்ளவர்களைவிடப் பெருத்த அனுகூல நிலையை அடைவார்கள். ஆங்கிலம் அறிந்தவர்களைவிட, இந்தி அறிந்தவர்கள் அதிகமாக இருக்கலாம். ஆனால், ஆங்கிலம் நாடு முழுவதும் சமமாகப் பரவியிருக்கிறது. ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருப்பதால், எந்தப் பகுதி மக்களும் மற்றவர்களை விட வசதியான நிலையிலோ, வசதியற்ற நிலையிலோ இல்லை. இப்போது அரசாங்க விவகாரங்களில் எல்லாரும் ஏற்றத் தாழ்வு இல்லாமல் சம வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் இந்தித் திணிப்பின் மூலம் இந்தச் சமத்துவத்தை நாசமாக்கப் பார்க்கிறார்கள்.

''முன்பு ஆங்கிலத்தைக் கட்டாயத்தின்மேல் படிக்கவில்லையா? அதேபோல் இப்போது இந்தியைப் படிப்பதில் சிரமம் என்ன?'' என்றெல்லாம் கேட்கிறார்கள். ஆங்கில ஆட்சியாளரின் கட்டாய முறை பற்றி இப்போது பேசுவதில் பொருள் இல்லை. அவர்களுடைய ஆட்சி முடிந்துபோய் அவர்கள் இந்நாட்டை விட்டுப் போயாகிவிட்டது. ஆங்கில மொழிமட்டும் இங்குத் தங்கியிருக்

கிறது. இன்று ஆங்கிலத்தை அதன் பயனைக் கருதித்தான் படிக் கிறோமே யன்றி வன்முறைக்கு அடங்கிப் படிக்கவில்லை.

இந்தியின் செய்தி வேறு. இந்தி மொழி பேசுகிறவர்களும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களும் ஒரு பெரும்பான்மை யினராகச் சேர்ந்துகொண்டு தங்களுடைய ஆட்சி அதிகாரத்தை வைத்து வன்முறையினால் அந்த மொழியை நம்மேல் திணிக்கி றார்கள். ஆங்கிலேய ஆட்சியின்போது ஆட்சியாளர்கள்மேலும் அவர்களுடைய மொழியின்மேலும் ஏற்பட்ட வெறுப்பு உணர்ச்சி தான் இப்போது மீண்டும் நம்முடைய நிகழ்கால இந்தி ஆட்சி யாளர்மேலும் ஏற்படும்.

நம் நாட்டின் பெரும்பான்மையினர்மீது வெறுப்பை உண் டாக்குவதற்கு இந்திமொழித் திணிப்பைப்போல வேறெதுவும் கிடையாது. இன்று எல்லோருக்கும் பொதுவாக உள்ள ஆட்சி மொழியை ஒரு சாராருக்குத் தனிச்சலுகை தருகிற முறையில் மாற்றி, செயற்கையாக ஓர் ஏற்றத்தாழ்வை உண்டாக்குவது பாதிக்கப் பட்டவர்களுக்கு எல்லையில்லாத மனவேதனையை உண்டாக்கி அவர்களைக் கடுமையாகத் துன்புறுத்தும். தங்களைக் கீழ்த்தரக் குடிமக்களாக்குகிற இரக்கமற்ற ஆட்சிமொழிச் சட்டம் மக்களைக் கொதிப்படையச் செய்யும். வெறுப்பு தலைதூக்கும்; நாட்டு ஒருமைப்பாட்டுக்குப் பேரிடர் ஏற்படும். இதற்கு இடமளிப்பது நீதியா? புத்திசாலித்தனமா?

(1963 இல் எழுதியது)


முறைகோடிய அறஞ்சாராச் செயல்

"எல்லா மொழிகளையும் சரி சமமாகக் கருதவேண்டிய இந்தியப் பேரரசு, இந்திக்கு மட்டும் வாரம் காட்டி, அதை ஆட்சி மொழியாக்கி வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் பெரும் பொருள் செலவு செய்வது முறைகோடிய அறஞ்சாராச் செய்கையாகும். இதுவே மாநிலங்களுக்கிடையே வெறுப்பை யும் வேற்றுமையையும் உண்டுபண்ணி யிருக்கிறது.


கருமுத்து தியாகராசச் செட்டியார்

(17-1-65 இல் திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் பேசியது.)


அருட்செல்வர் தி. செ. விசுவநாத பிள்ளை அவர்கள் படத்திறப்பு விழா
(15—2—79)




அருட்செல்வர் தி. செ. விசுவநாத பிள்ளை அவர்களின் திருவுருவப் படத்தினைக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை திறந்து வைத்தல்



படத்திறப்பு விழாவில் கலந்துகொண்ட கழகத் தலைவர் உயர்திரு மு. காசிவிசுவநாதன் செட்டியார், கழகச் செயற்குழு உறுப்பினர் திரு. நெ. சுப்பிரமணியபிள்ளை.



உரை நிகழ்த்திய கழக ஆட்சியாளர்
செல்வியில் வெளிவந்த அருட்செல்வர் வரலாற்றைப் படித்த
பேராசிரியர் க. வ. முத்தையாபிள்ளை, எம்.ஏ.



விழாவில் பங்குகொண்ட கழகப் பொதுமேலாளர்,
அருட்செல்வரின் பேரர்கள் திரு. தி. து. பிச்சுத்தாயப்பன், திரு . தி. து.
பாலசுப்பிரமணியனார், கழகச் செயலுறுப்பினர்
திரு. கா. வ முத்தையாபிள்ளை.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மட்டிட்ட கூட்டுப்பங்கு நிறுவனமாகத் தோன்றுவதற்கு முதற் காரணராக இருந்த அருட்செல்வர் தி. செ. விசுவநாத பிள்ளை, பி.ஏ. அவர்கள் திருவுருவப்படத் திறப்புவிழா

கழகத்தின் 58ஆவது ஆண்டு பங்காளிகள் கூட்டம் 15—2—79 இல் திருநெல்வேலியில் உள்ள பதிவு செய்யப்பெற்ற அலுவலகத்தில் அன்று மாலை 5-30 மணிக்குத் தொடங்கி நடைபெற்றது. பங்காளிகள் கூட்டம் மாலை 6-30 மணிக்கு முடிவுறவே, அருட்செல்வர் தி. செ. விசுவநாத பிள்ளை அவர்கள் திருவுருவப் படத் திறப்பு விழா தொடங்கியது. அவ் விழாவுக்குக் கழகப் பங்காளிகளேயல்லாமல் அன்பர்களும், அறிஞர்களும், உறவினர்களும் வந்திருந்தனர்.

கழக ஆட்சியாளர் அவர்களின் தொடக்கவுரை

திருவாளர் தி. செ. விசுவநாதபிள்ளையவர்கள் தமது கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன், தம்மோடு உடன் படித்த நண்பர் திரு. என். எஸ். சாரியார் அவர்களுடன் பிரம்பூர், குரோம்பேட்டை, பெங்களூர் முதலான ஊர்களில் தோல் பதனிடும் தொழில் நிறுவனங்களில் பொறுப்பாளர்களாகப் பணிபுரிந்து வந்தார்கள். 1920 ஆம் ஆண்டில் அவர்கள் நெல்லைக்கு வந்திருந்தபோது அவர்தம் தமையனார் தொடங்கிய கே. எஸ். பாங்க் என்ற நிறுவனத்தில் மேலாளராக இருந்த திருவாளர் மா. திரவியம் பிள்ளை அவர்களிடம் தமிழுக்கும், சைவத்துக்குமாகக் கூட்டுப்பங்கு நிறுவனம் ஒன்று தொடங்குமாறும், தாம் தொடக்கத்திலேயே 10/- ரு. பெறுமான 100 பங்குகள் எடுத்துக்கொள்வதாகவும் உறுதி கூறினார்கள். அவ்வமயம் என் அருமைத் தமையனார் திருவாளர் திருவரங்கம் பிள்ளையவர்கள் சென்னையில் திருசங்கர் கம்பெனி என்ற புத்தக நிறுவனத்தை நடத்தி வந்தார்கள். திருவாளர் மா. திரவியம் பிள்ளை அவர்கள் தம்மிடம் திரு. தி. செ. விசுவநாத பிள்ளை அவர்கள் வெளியிட்ட கருத்தை என் தமையனாரிடம் தெரிவித்து இருவரும் கூட்டமைச்சர்களாகத் திருநெல்வேலியில் 21—9—1920இல் ''திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்'' என்ற பெயரில் பதிவு செய்து தொடங்கினார்கள். திருவாளர் மா. திரவியம் பிள்ளை அவர்கள் 1924 ஆம் ஆண்டு இறையடி சேரவே அவர்கள் மக்கள் இருவர் அடுத்தடுத்து மூன்று ஆண்டுகள் வரை கூட்டமைச்சராகப் பணியாற்றினர். பிறகு அவ்விருவரும் விலகும்படி ஏற்பட்ட செய்திகளை இங்கே விளக்க வேண்டியதில்லை.

இப்போது கழகத்தலைவராக இருக்கும் பாகனேரி உயர்திரு மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் 1922 ஆம் ஆண்டு 100 பங்குகள்

எடுத்து இரண்டு தவணைகளில் ரூ. 1000/- அனுப்பி வைத்தார்கள். 'விசுவநாதன்' என்ற திருப்பெயரைத் தாங்கிய இவ்விருவரும் துவக்கத்திலேயே இப்படி ஒரு நிறுவனம் தொடங்கி இத்தனை ஆண்டுகள் நடைபெறுமா என்பதைச் சிறிதும் கருதாமலே பங்குகளை எடுத்து ஊக்கியது தமிழுலகமும் சைவ உலகமும் என்றும் போற்றிப் பாராட்டுதற்குரியது. திரு. தி. செ. விசுவநாத பிள்ளை அவர்கள் அன்று நாட்டிய பயன்மரம் இன்று பல்சுவையுடைய பழங்களைத் தரும் மாபெரு மரமாக வளர்ந்து உலகு புகழ் ஈட்டி வருகின்றது என்று சொன்னால் மிகையாகுமா என்று உள்ளப்பூரிப்போடு கூறுகிறேன். (வந்திருந்த அனைவரும் கேட்டுக் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.)

பின்னர் இந்துக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்ற திரு. க. வ. முத்தையா பிள்ளை, எம்.ஏ. அவர்கள் செந்தமிழ்ச் செல்வி 45 ஆவது சிலம்பில் வெளிவந்திருக்கும் திருவாளர் தி. செ. விசுவநாத பிள்ளை அவர்கள் வரலாற்றை மிகவும் தெளிவாகப் படித்து இன்பம் ஊட்டினர். அடுத்து அருட்செல்வர் திருவுருவப்படத்தின் முன் ஆட்சியாளர் அவர்கள் நின்று படம் எடுக்கப்பெற்றதோடு இப்போதைய கழகத்தலைவர் அவர்களும், கழகப் பொதுமேலாளரும், நெல்லைக்கிளை மேலாளரும் மற்றும் சிலரும் நிற்க, சில படங்கள் எடுக்கப்பெற்றன. அவை இவ்விதழிற் காணப்பெறும். தேவார இசைப்புலவர் திருவாளர் இராமலிங்க தேசிகர் அவர்கள் விழா நிகழ்ச்சியின்போது இடையிடையே திருமுறை ஓதி உள்ளத்துக்கும் செவிக்கும் இன்பம் ஊட்டினர்.

இங்கே கழகப் பங்காளிகட்கு மகிழ்ச்சியூட்டும் செய்தியொன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1952 ஆம் ஆண்டில் கழகக் காப்புநிதியிலிருந்து ரூ. 50,000/- எடுத்துப் பங்கு ஒன்றுக்கு ஒரு பங்கு விழுக்காடு போனசாகப் பங்காளிகட்குக் கொடுக்கப்பெற்றது. அடுத்து 1963 இல் மீண்டும் கழகக் காப்புநிதியிலிருந்து ரூபா நூறாயிரம் எடுத்துப் பங்கு ஒன்றுக்கு ஒரு பங்கு விழுக்காடு போனசாகப் பங்காளிகட்குக் கொடுக்கப்பெற்றது.

இம் முறையில் தொடக்கத்தில் நல்லுள்ளத்தோடு நூறு பங்குகள் எடுத்த 'விசுவநாதன்' என்ற திருப்பெயரையுடைய அருட்செல்வர் இருவரும் நானூறு பங்குகள் உடையவர்களாகிப் பெருமகிழ்ச்சியுற்றனர். அவ்வாறே ஏனைய பங்காளிகளும் நன்மையடைந்தார்கள் என்பது சொல்லாமலே தெரியவரும்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

என்ற பொன்மொழியை நினைவுகூர்ந்து மகிழ்வோம்.

தில்லைவடிவம்மையார் மறைவு

மட்டிட்ட சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தோன்றுவதற்கு முதற் காரணராயிருந்த அருட்செல்வர் தி. செ. விசுவநாதபிள்ளை அவர்களின் இன்னுயிர்த் துணைவியார் சிவபத்தி அடியார்பத்தி நிறைந்த தில்லைவடிவம்மையார் அவர்கள் சென்னை அண்ணாநகரிலுள்ள தம் இளையமகனார் தி. வி. இலக்குமணசாமி அவர்கள் இல்லத்தில் தமது 93 ஆவது அகவையில் 6—3—79 செவ்வாய் அன்று காலை 4 மணியளவில் தமது பிரிவு குறித்து முன்னறிவிப்புச் செய்து அமைதியாக இறைவன் திருவடி நீழலை அடைந்தார்கள். 11-2-79 இல் கழக ஆட்சியாளர் அவர்கள் அண்ணாநகர் சென்று அம்மையார் அவர்களைக் கண்டு வணக்கம் தெரிவித்து அவர்களிடம் திருநீறு பெற்றுக்கொண்டனர்.



அன்று அவர்களிடம் தெரிவித்தவாறு 15-2-79 இல் திருநெல்வேலியில் நடைபெற்ற 58 ஆவது ஆண்டுக் கழகப் பங்காளிகள் கூட்டத்திலே அருட்செல்வர் விசுவநாதபிள்ளை அவர்கள் திருவுருவப்படம் திறந்து வைக்கப்பெற்றது. தம்முடைய பிரிவுக்கு முன்பு தம் கணவரின் படம் திறந்து வைக்கப்பெற்ற செய்தி தெரியப்பெற்றுக் கழிபேருவகை அடைந்தார்களென்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இவர்கள் சைவவேளாளர் மரபிலே ஒத்த பண்பும் நலமும் நிறைந்து மங்கட்செல்வத்துடன் முழுவாழ்வு பெற்று எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டியவர்களென்றால் அது மிகையாகாது.

பிரிவுற்ற அருளம்மையார் ஆருயிர் இறையடியில் இன்ப அன்புற்று அமர்கவென வேண்டுவோம்.

கவிஞர் எஸ். டி. சுந்தரம் மறைவு

சேலம் மாவட்டம் ஆத்தூரில் பிறந்தவரும், தமிழக முன்னாள் மேலவை உறுப்பினரும், தமிழ்நாடு இயலிசை நாடக சங்கத்தில் 13 ஆண்டுகள் தொடர்பாகச் செயலாளராக இருந்தவரும், கவிதைகள், நாடகங்கள் ஆகிய நூல்கள் பல இயற்றியவரும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பணிகளைப் பாராட்டியவருமான கவிஞர் சுந்தரம் அவர்கள் தமது 58 ஆவது அகவையில் இறையடி சேர்ந்தமை குறித்து மிகவும் வருந்துகிறோம். அவர்தம் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



டாக்டர் டி. பி. சந்தான கிருட்டிண நாயுடு பி.ஏ., எல்.டி.
மறைவு

சிறந்த கல்வித்துறை அறிஞரும், பள்ளிக் கல்வித் துணை இயக்குநரும், சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முதல்வராயிருந்தவரும் கழக நூலாசிரியர்களுள் ஒருவருமான உயர்திரு டி. பி. சந்தான கிருட்டிண நாயுடு அவர்கள் 1-3-79 இல் தமது 80 ஆவது அகவையில் குரோம்பேட்டை நேரு நகரிலுள்ள 'கீனு' என்னும் தமதில்லத்தில் பருஉடம்பு நீத்து நுண்ணுடம்பில் இறைவனடி சேர்ந்தார் என்னும் செய்தியறிந்து வருந்துகிறோம்.



*சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திடமும் கழக ஆட்சியாளர் அவர்களிடமும் அளவிறந்த பற்றுடையவரும், கழகத்தின் பணிகளை மனம்விட்டுப் பாராட்டும் இயல்புடையவருமான திரு நாயுடு அவர்கள் செயல் திறம் வாய்ந்தவர்; இறையன்பு மிக்கவர்: அருளாளர்; செஞ்சிலுவைச் சங்கம், சாரணர் இயக்கம் ஆகியவற்றின் அமைப்பாளராகப் பணியாற்றியவர்; அருட்டிரு நாராயணகுரு அவர்களின் மாணவராகவும், செய்வன திருந்தச் செய்யும் இயல்பினராகவும் விளங்கியவர். இத்தகைய நல்லார் 31-2-1899 ஆம் ஆண்டில் தோன்றினர்

15-1-79 இல் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் தம்ம் நாட்டரசு கழக ஆட்சியாளர் செய்துள்ள செய்துவரும் தொண்டுகளைப் பாராட்டிச் 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் பட்டம் வழங்கிய செய்தி தெரிந்து தொலைபேசியில் தமது மட்டற்ற மகிழ்ச்சியினைத் தெரிவித்துள்ளனர்.

இவர்தம் திருமகளார் டாக்டர் கனகா அம்மையாரவர்கள் சென்னை பொது மருத்துவமனையிலுள்ள நரம்பு மருத்துவத்துறையில் புகழ் பெறும் மருத்துவராகப் பணிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

மறைந்த இப் பெரியாரின் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்தம் இன்னுயிர் இறையடியில் இன்புறுவதாக!

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்"

—குறள், 233

---

* கழக விழா மலர்கட்கு எழுதிய இவர்தம் பாராட்டுரைகளைப் பின் பக்கங்களிற் காண்க.

திரு. சந்தானகிருட்டிண நாயுடு அவர்கள் கழகத்தின் 1008 ஆவது வெளியீட்டு விழா, கழகப் பொன்விழா, கழக ஆட்சியாளர் பவளவிழா ஆகியவற்றுக்கு விடுத்த வாழ்த்துச் செய்திகள் வருமாறு:

கழகத்தின் 1008 ஆவது வெளியீட்டு விழா வாழ்த்து

On the occasion of the release of the 1008 th publication of the South India Saiva Siddhanta Works Publishing Society, let me be allowed to join the chorus of admiration, respect and tribute to the ever thoughtful, unceasing, imaginative and enterprising endeavours, during the past forty years, of the Society to enrich the cultural life not only of Tamil Nad, but also of several Tamil lovers all over the world, and to wish the Society a successful and ever more glorious continuance of its inspiring and far-reaching service to humanity.

Let me also take this opportunity to felicitate the founders and the members and all who have contributed to the Society's achievements and, in particular, Thiru. Va. Subbiah, the moving spirit and symbol of the Society. and to wish all of them many, many more decades of noble service in this vast field.

—கழக 1008ஆவது வெளியீட்டுவிழா மலர் 6-8-1961 பக்கம் 27

கழகப் பொன்விழா வாழ்த்து

வணக்கம். தங்கள் அறிக்கைக்கிணங்க என் வாழ்த்துரையை எழுதியனுப்புகிறேன். தாங்கள் என்பால் கொண்டுள்ள நினைவுக்கு நன்றி.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பொன்விழா மிகச் சிறப்புடன் நடைபெறவும், கழகத்தின் பல்துறை நற்பணிகள் பல நூற்றாண்டுக் காலம் தமிழ்நாட்டுக்கும், பிறநாடுகளுக்கும் இன்னுறவுடன் உயர்ந்தோங்கி வளர்ந்துதவவும், அப் பணிகளில் ஈடுபட்டுள்ள தந்நலமற்ற தொண்டர் பெருமக்கள் நெடுங்காலம் புகழுடன் வாழ்ந்து இன்புறவும் இறையருள் புரிய வேண்டுமெனப் பணிவுடன் வாழ்த்துக்கூறுகிறேன்.

சென்ற ஐம்பதாண்டுகளில் கழகத்தின் தொடர்பினல் பற்பல பேரறிஞர்களின் நட்பையும் ஊக்கமளிப்பையும் பெற்றேன். அவர்

களின் பெயர்களையும் பேருதவிகளையும் விளக்கமாகக் கூறி நன்றி செலுத்த இவ் வேட்டில் இடம் போதாதெனினும், முதன்முதலாகக் கழகத் தொடர்பமைத்தளித்த புலவர் அ. நடராசபிள்ளையவர்களை யும் ஆசிரியர் க. ப. சந்தோஷம் (மகிழ்நன்) அவர்களையும் என்றும் மறவேன். இவ் அரை நூற்றாண்டுக் காலமாகக் கழகத்தின் தனிச் சிறப்புக்கும் பெரும்புகழுக்கும் அயராப்பணியாற்றியும், எனக்கும் என்னைப்போன்ற பலருக்கும் ஊக்கமளித்தும் வரும் அன்பர் தாமரைச்செல்வர் வ. சுப்பையாபிள்ளை அவர்களுக்கும் இன்றும் என்றும் என் நன்றியையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

—கழகப் பொன்விழா மலர் 1970 பக்கம் 30

கழக ஆட்சியாளர் பவளவிழா வாழ்த்து

திரு. பிள்ளையவர்களின் நட்பை ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாகப் பெற்றுப் பயனடைந்திருக்கிறேன். நூலாசிரியர் தமிழ்ப்புலவர் திரு. க. ப. சந்தோஷம் (மகிழ்நன்) அவர்களும் எனக்குக் கழகத்தை அறிமுகப்படுத்தினர். அக்காலமுதல் எனக்குத் தெரிந்தவரையில் கழகமே திரு. சுப்பையாபிள்ளை அவர்கள்; திரு. பிள்ளை அவர்களே கழகம் என்று கருதி வருகிறேன். சிறிதளவே தமிழ்கற்ற என்னைச் சில சிறு நூல்களை எழுத ஊக்குவித்தவர் திரு. பிள்ளையவர்கள். திரு. பிள்ளையவர்களைக் காணும் போதும் அவர் களுடன் நேரிலோ தொலைபேசியிலோ உரையாடும்போதும் அவருடைய இன்சொற்களில் மகிழ்ச்சி பெற்றுள்ளேன். இவற்றிற் கெல்லாம் நான் அவருக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறேன்.

திரு. பிள்ளையவர்களின் தமிழ்த்தொண்டு மலையளவானதும் பல துறைகளில் மிகப்பரவலும் ஆழமுமானதும் ஆகும். பன் னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே கழகத்தின் 1008 வது நூல் வெளியீட்டுவிழா நடந்தது. அந் நூல்களில் ஏறக்குறைய அத் தனையுமே திரு. பிள்ளை அவர்களின் விடாமுயற்சியினாலும் அவர் களுடைய அச்சுத்திருத்தம், பதிப்பழகு, பொருள் நிறைவு முதலி யவற்றில் கொண்டுள்ள உணர்ச்சியினாலும் வெளிவந்தவை. திருக் குறட் பதிப்புக்கள் பலவும், முப்பத்தொன்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவரும் திருக்குறள் நாட்குறிப்பும் கழகப்பதிப்புக் களின் சிறப்பை எடுத்துக்காட்டுவனவாகும்.

—கழக ஆட்சியாளர் பவளவிழா மலர் 1973 பக்கம் 58

———

செய்திகளும் குறிப்புக்களும்

குமர குருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளியின் பதினோராவது ஆண்டுவிழா

திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அற நிலையங்களில் ஒன்றான தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் சார்பில், 1967 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14 ஆம் நாள் குமர குருபரர் குழந்தை வளர்ப்புப் பள்ளி தொடங்கப்பட்டது. இந் நாளை முன்னிட்டு இவ்வாண்டு பிப்ரவரி 17ஆம் நாள் பதினோராவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. மாலை 5-30 மணி அளவில் விழா தொடங்கப்பட்டது.

10 குழந்தைகளுடன் துவங்கிய இப் பள்ளியில் இப்போது 350 குழந்தைகள் கல்வி பயில்கிறார்கள். L K.G. முதல் 5 வகுப்புகள் வரை ஆங்கில பாடத்திட்ட முறையில் நடந்து வருகிறது. சீரிய முறையில் நடந்து வரும் இப் பள்ளி ஆண்டு விழாவுக்கு உயர்திரு, சாரதா சண்முகம், எம்.ஏ.பி.டி, ஆர் பி வி அவர்கள் (பள்ளித் துணை ஆய்வாளர் தலைமை தாங்கிப் பள்ளியின் வளர்ச்சி பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். விழாவில் சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு பற்றிய உரையாடலும் பட்டி மன்றமும், மற்றும் நாடகம், நடனம் போன்றவையும் சிறப்புற நடைபெற்றன. விழாவில் கலந்து கொண்ட குழந்தைகட்கு திருமதி. டாக்டர். காஞ்சனா, எம் பி, பி எஸ். அவர்கள் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள். நாட்டுப் பண்ணுடன் விழா மிகவுஞ் சிறப்புற முடிந்தது.

உலக, புத்தக வெளியீட்டின் பெருக்கம்

கடந்த 20 ஆண்டுகளில் உலகெங்கணும் நடைபெற்றுவரும் புத்தக வெளியீட்டுப் பணி இரண்டு மடங்காகப் பெருகியுள்ளது என்று அண்மையில் வெளியிடப்பட்ட ஒன்றிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம் ஒரு புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளது.

1955ஆம் ஆண்டில் 2,69,000 ஆக இருந்த வெளியீடுகளின் எண்ணிக்கை 1976ஆம் ஆண்டில் 5,91,000 ஆக உயர்ந்துள்ளது என்று 1975ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒன்றிய நாடுகளின் கல்வி அறிவியல், பண்பாட்டுக் கழக ஆண்டுப் புத்தகத்தில் (year book) குறிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிமொழிச் சிக்கல் தீர நாடாளுமன்றத்தில் தீர்மானம்

"அரசாங்க அலுவலகங்கள், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், தனியார் நிறுவனங்கள் ஆகிய இடங்களில் இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கும் பணியில் நடுவணரசு மிகக் கடுமையாக ஈடுபட்டிருக்கிறது. இதனை அரசினர் கவனித்து ஆட்சி மொழிச் சட்டத்தைத் திருத்தவேண்டும். இல்லையேல் இச் சிக்கலை

நாட்டுப் பிரிவினைக்கு ஏதுவாகிவிடும்'' என்று 23—2—79இல் நாடாளுமன்றத்தில் தாம் கொண்டுவந்த தீர்மானம் ஒன்றின்மூலம் தமிழக உறுப்பினர் திரு முரசொலி மாறன் எச்சரிக்கை விடுத்துள்ளார். அதையொட்டித் திரு. பி. இராமமூர்த்தி, திரு ஜக்சித்சிங், ஆனந்த், கே. கே மாதவன், திரு. கோபால்சாமி முதலியோர் இந்தி புகுத்துவதை வன்மையாகக் கண்டித்து எல்லா மொழிகட்கும் சம உரிமைகொடுக்கப்பெறுதல் வேண்டும் என்று பேசியுள்ளனர்.

இந்து 10—3—1979

இந்தி பற்றிக் கலைஞர் தரும் புள்ளி விவரம்

1971ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகைக் கணக்குப்படி, இவ்விந்திய நாட்டின் மக்கட்டொகை 60 கோடி. இதில் இந்தி பேசுவோர் தொகை 17 கோடி. இவர்களுக்குள்ளும் இந்தி எழுதப் படிக்கத் தெரிந்தோர் தொகை நூற்றுக்கு 22 பேரேயாவர் (அஃதாவது மூன்று முதல் நான்குகோடி பேர்தாம்).

அதே சமயத்தில் மற்ற இந்திய மொழிகளைப் பேச எழுதத் தெரிந்தோரின் தொகையினையும் பார்ப்போம்: மலையாளம் 60 விழுக்காடு; தமிழ் 39 விழுக்காடு; வங்காளி 33 விழுக்காடு; பஞ்சாபி 33 விழுக்காடு; இங்ஙனம் பல்வேறு மொழி பேசுவோரின் விழுக்காட்டுத் தொகையினைக் காணும்போது, இந்தி தொடர்பு மொழி ஆவதற்குரிய தகுதியினைப் பெறமுடியாது.

இதுபோலவே செய்தித்தாள் படிப்போரின் எண்ணிக்கையினைப் பார்க்கும்போது, ஆயிரத்தில் 125 பேர் ஆங்கில இதழ்களைப் படிக்கிறார்கள். பிறமொழிகளில் மலையாளம்—36 பேர், தமிழ்—21; உருது—12; வங்காளி—10; இந்தி—6

இச் செய்தியினைக் கலைஞர் கருணாநிதி அவர்கள் கடந்த திசம்பரில் திருச்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் வெளியிட்டார்.

திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியா அவர்களின் கடிதம் பற்றி ஒரு குறிப்பு

செல்வியின் சென்ற இதழில் (சிலம்பு 53 பரல் 6) திரு பி. ஸ்ரீ. அவர்கள் கழக ஆட்சியாளர் அவர்கட்கு எழுதிய கடிதத்தையும், அதற்கு ஆட்சியாளர் அவர்கள் விடுத்த மறுமொழியையும் வெளியிட்டிருந்தோம்.

திரு. பி. ஸ்ரீ அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்ட 'கருத்து வேற்றுமை' தனித்தமிழ்க் கொள்கை பற்றியதாகும். 17—10—47 சுதேசமித்திரன் இதழில் அவர், தனித்தமிழ்க் கொள்கைப் பெருமக்களான மனோன்மணீய நாடகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, தாகூர் சட்ட விரிவுரையாளர் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, பொறியியல் வல்லுநர் பா. வே. மாணிக்க நாயக்கர் ஆகிய முச்சுடர் மணிகளின் கருத்துக்களைப் போலியாக மறுத்தும் வெறுத்தும் எழுதியுள்ளார். இதுபற்றிப் 'பி. ஸ்ரீ. அவர்களின் பொருந்தாப் போக்கு' என்னும் தலைப்பில் செல்வியில் ஒரு கண்டனக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதனைச் செல்வி—சிலம்பு 22 பரல் 3 பக்கம் 117இல் கண்டுகொள்க!

கருநாடக மாநிலத் தமிழாசிரியர் சங்கம்

கருநாடக மாநிலத் தமிழாசிரியர் சங்கத்தின் சார்பில், பெங்களூர் தண்டு சோதிமன்றத்தில் தமிழ் இலக்கிய மாநாடு என்ற தமிழாசிரியர் மாநாடு, முறையே சனவரித் திங்கள் 12, 13, 25, 26 ஆம் நாள்களில் சிறப்புற நடைபெற்றது. குன்றக்குடி அடிகளார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், பேராசிரியர் கு. சுந்தர மூர்த்தி மற்றும் தமிழறிஞர்கள் பலர் உரையாற்றினர். இவ் விழா வினை யொட்டிக் கவியரங்கம், பட்டிமன்றம் முதலியனவும் நடை பெற்றன.

மதுரைத் திருவள்ளுவர் கழகம் சைவசித்தாந்த விரிவுரை விழா

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில் சிந்தாமணி மொழிச் செல்வர் சி. இராமசாமிச் செட்டியார் ஒன்பதாமாண்டு நினைவுச் சைவ சித்தாந்த விரிவுரை விழா 9—2—79 முதல் 15—2—79 முடிய 7 நாள்கள் நாடோறும் இரவு 7 மணிக்குத் திருவள்ளுவர் கழக மன்றத்தில் நடைபெற்றது. திரு கி. பழநியப்ப பிள்ளை அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்துத் தலைமை தாங்கினர்கள். சித்தாந்த அறிஞர் சிவத்திரு ஐயாமணிச் சிவம் அவர்கள் 'வினா வெண்பா' பற்றி ஏழு நாள்களும் சொற்பொழிவாற்றினர்.

இசைவாணர்களுக்குத் தமிழ் இசைச் சங்கப் பரிசுள்

காலஞ்சென்ற இராசா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்களின் மகள் உண்ணாமுலை ஆச்சி அவர்கள், தம் அன்னையார் சீதை ஆச்சி அவர்கள் நினைவாக நிறுவியுள்ள அறநிலைய வைப்புத் தொகையான ரூ 25,000த்திலிருந்து சிறந்த நாதசுர கலைஞருக்கு ரூ 5,000 மும், சிறந்த தேவாரப் பாடகருக்கு ரூ 5,000 மும் பரிசாக வழங்குவ தெனத் தமிழிசைச் சங்கம் முடிவு செய்துள்ளது.

அண்ணாநகர் அருட் பதிகம்

திருச்சி மாவட்டம் அரியலூரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தினரால் அரசிதழ் பதிவுபெற்ற அலுவலர்க்கென்றே 'அண்ணாநகர்' என்ற பெயரில் ஒரு நகர் உருவாகியுள்ளது. அங்கு அன்பர் பலரின் முயற்சியால் அருள்மிகு காமாட்சி ஏகாம்பரர் திருக்கோயில் ஒன்று உருவாக்கப்பெற்று அதன் குட முழுக்கு விழா 9-2-79 இல் திருமுருக கிருபானந்தவாரியார் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அப்போது புலவர் சுவை மருதுவாணன், எம்.ஏ., பி.எட். அவர்கள் 'அண்ணாநகர் அருட்பதிகம்' என்ற தலைப்பில் அழகிய அருட்பதிகம் ஒன்றினைப் பாடியுள்ளார்.

சிங்கப்பூர் தமிழர் சங்கம் பொங்கல் விழா

திருவள்ளுவர் ஆண்டு 2010 தைத்திங்கள் முதல்நாள் (14-1-79) அன்று மாலை சிங்கப்பூர் குடியரசு கேனிங்ரைஸ் முதியோர் கல்விக் கழகக் காலச்சார மன்றில் சிங்கப்பூர் தமிழர் சங்கத்தின் சார்பில் பொங்கல் விழா, கலைக்காட்சி சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

*

திரு. எஸ். பி. மூர்த்தியவர்கள் வரவேற்புரை நிகழ்த்திஞர். தமிழர் சங்கத்தலைவர் திரு. சொ. ஐ. துரையவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கிப் பொங்கல் விழாவின் சிறப்பினை விளக்கி நீண்டதொரு சொற்பொழிவாற்றினர். திரு. தமிழ்ச் செல்வம் நன்றி கூறினர். இவ் விழாவினை யொட்டி இசை, நடனம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் பரல்-௬, ௩௪0ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர் திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள்		
கழக ஆட்சியாளர் பிப். 79	10	00
,, ஆ. சுப்பையா பிள்ளை அவர்கள்		
கழக மேலாளர், பிப். 79	5	00
திரு. க. சி. கமலையா அவர்கள், சென்னை-83.	25	00

மதிப்புரை

சிலம்பில் அவலம்

[ஆசிரியர்கள்: க. முத்துச்சாமி - ஆ. முத்தையா; வெளியீடு: அன்றில் பதிப்பகம், தருவித்துறை (அஞ்.), மதுரை (மா. வ.) விலை: உருவா 8-50].

சிலப்பதிகாரம் ஓர் அவல இலக்கியம் என்னும் கருத்தை நிலை நாட்ட முயலுகின்ற இந் நூல் எண் பெருந் தலைப்புக்களில் பாகு படுத்தப்பட்டுள்ளது. நூலின் நடையும் கருத்துக்களைக் கட்டுப் கோப்பாக அமைத்துள்ள பாங்கும் சிறப்புற அமைந்துள்ளன. பண்டாரகர் தமிழண்ணல் அவர்களின் சீரிய அணிந்துரையோடு கூடிய இந்நூல் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படும்.

குறள் அறிமுகம்

[ஆசிரியர்: இரா. மதிவாணன்; வெளியீடு: தாய்நாடு பதிப் பகம், 31 புகைவண்டி நிலையப்பாதை, வில்லிவாக்கம், சென்னை-49; விலை: உருவா 5-50.]

இந் நூலில் 61 குறட்பாக்கள் எளிய தெளிவான நடையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அறிமுகம் என்று பொதுப்படக் குறிப்பிட்டிருப்பினும் ஆய்வுக்குரிய கருத்துக்கள் பல ஆங்காங்கு மின்னுகின்றன. அறிமுகப்படுத்தப்பட்ட குறட்பாக்களின் கீழ் அவற்றின் கருத்துக்களும் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. திருக்குறள் பரவ இந்நூல் பெரிதும் பயன்படும்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

'செந்தமிழ்ச் செல்வி' பற்றிய உரிமை விளக்கம்–1956 ஆம் ஆண்டுச் சட்டம் - விதி 8 - படிவம் 4 இல் கண்டுள்ளபடி

1. வெளியிடும் இடம் : 79, பிரகாசம்சாலை, (பிராட்வே) சென்னை 1.
2. வெளியீட்டு முறை : திங்களிதழ்
3. அச்சிடுவோர் பெயர் : அப்பர் அச்சகம்
   இனம் : இந்தியர்
   முகவரி : 80, பிரகாசம்சாலை, சென்னை-1
4. வெளியீட்டாளர் பெயர் : திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
   இனம் : இந்தியர்
   முகவரி : 79, பிரகாசம்சாலை, சென்னை-1
5. ஆசிரியர் பெயர் : திரு. வ. சுப்பையாபிள்ளை
   இனம் : இந்தியர்
   முகவரி : 79, பிரகாசம்சாலை, சென்னை-1
6. இதழ் உரிமையாளர்கள், மூலதனத்தில் நூற்றுக்கு ஒரு விழுக்காட்டிற்கு மேற்பட்ட பங்குடைய பங்காளிகள் ஆகியோரின் பெயர்களும் முகவரிகளும்:

1. திரு. T. S. இராமலிங்கம் பிள்ளை, M. A., B. L.
   ஓய்வு பெற்ற சட்டத்துறைச் செயலாளர்,
   பி. 11, ஏ. செக்டர்மகாநகர், லக்னோ.

2. திரு. வ. சுப்பையா பிள்ளை
   91, பவழக்காரத் தெரு, சென்னை-1.

3. திருமதி சு. மங்கையர்க்கரசி
   91, பவழக்காரத் தெரு, சென்னை-1.

4. திரு. R. M. K. S. கோபாலகிருஷ்ண பிள்ளை
   வணிகர், சாத்தான்குளம்,
   (திருநெல்வேலி மாவட்டம்)

5. திரு M. K. சிவகாமிநாத பிள்ளை
   C/o R. M. K. V. சன்ஸ்,
   வடக்குரதவீதி, திருநெல்வேலி-6.

6. திரு. N. S. சுந்தரம், பார்-அட்-லா,
   134, தெற்கு இராச வீதி, தூத்துக்குடி.

7. திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார்
   வங்கியார், பாகனேரி, (இராமநாதபுரம் மாவட்டம்)

8. திருமதி கா. லட்சுமி ஆச்சி
(திரு. காசிவிசுவநாதன் செட்டியார் மனைவி)
பாகனேரி.

9. திரு. பெரி. அழ. மு. நா. நாராயணன் செட்டியார்
உரிமையாளர், பாரி அச்சகம், 66, பிரகாசம் சாலை, சென்னை-1.

10. திரு. மு. ஆறுமுகம்
15. பெருமாள் வடக்கு மாடத்தெரு,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

11. திருமதி க. வடிவழகி
(திரு. இரா. கலியாணசுந்தரம் மனைவி)
2, மேட்டுத் தெரு, சென்னை-1.

12. திருமதி. மு. வயிரமணி
(திரு. இரா. முத்துக்குமாரசாமி மனைவி)
2, மேட்டுத் தெரு, சென்னை-1.

13. திருமதி பழ. மீனாட்சி ஆச்சி
(திரு. S. M. பழனியப்ப செட்டியார் மனைவி)
11, ரட்லண்ட் கேட், 2-வது தெரு,
சென்னை-6.

14. திரு. S. Ct. சிதம்பரம் செட்டியார்
162, அவினாசிசாலை, கோயமுத்தூர்-1.

15. திரு. A. Kn. அருணாசலம்
(திரு.கண்ணப்பசெட்டியார்புதல்வர்)நாயனார்குளத்தெரு
நாட்டரசன் கோட்டை, (இராமநாதபுரம் மாவட்டம்)

16. திருமதி T. S. J. தனலட்சுமி அம்மையார்
(திரு. T. S. ஜம்புலிங்கம் செட்டியார் மனைவி)
திருப்பூர் இல்லம், கோயமுத்தூர்.

17. திரு. Rm. K. Rm. இராமசாமி செட்டியார், வக்கீல்,
இட்டை, (தஞ்சை மாவட்டம்)

18. திரு. இரா. கலியாணசுந்தரம், பி. எஸ்ஸி.
2, மேட்டுத்தெரு, சென்னை-1.

19. திரு. இரா, முத்துக்குமாரசாமி, எம்.ஏ.,பி.லிப்
2, மேட்டுத்தெரு, சென்னை-1.

மேலே தரப்பட்டுள்ள விளக்கங்கள் அனைத்தும் என்னுடைய முழு நம்பிக்கைக்கும் அறிவுக்கும் ஏற்ப உண்மையானவை என வ. சுப்பையா பிள்ளையாகிய யான் உறுதியளிக்கிறேன்.

10—3—1979 (ஒப்பம்) வ. சுப்பையாபிள்ளை
பதிப்பாளர்

பதிவு எண் : M. 4899

கழகப் புதிய வெளியீடுகள்

பல்லவர் ஆட்சி

—புலவர் சொ. முருகேசனுர்.

பள்ளி மாணவர்கள் படித்துப் புரிந்துகொண்டு வரலாற்று அறிவினைப் பெறும் வண்ணம், இனிய எளிய தமிழில் எழுதப் பட்டுள்ளது இந் நூல். பல்லவர்க்கு முற்பட்ட தமிழக வரலாற்றி லிருந்து முற்கால, இடைக்கால, பிற்கால பல்லவர் ஆட்சி வரலாறுகளைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் இந்நூல் பள்ளி நூலகங்களிலும் பொது நூலகங்களிலும் இன்றியமை யாது இருக்கவேண்டிய நூலாகும். ரூ. 6 00

அறிவியல் அறிஞர் மூவர் (வரலாற்று நாடகங்கள்)

—புலவர் பொன். முனியப்பன். ரூ. 3 75

வீரக்கனல் (வரலாறு தழுவிய கற்பனை நாடகம்)

ஆசிரியர் : மா. பா. குருசாமி, எம்.ஏ., டி.ஜி.டி., எம்.லிட்,

பள்ளி மாணவர் படித்தும் நடித்தும் மகிழ்தற்குரிய இலக்கிய நாடகம் ரூ. 3 00

சேரர் ஆட்சி—என். கே. வேலன், பி. ஏ. ரூ. 6 00

சோழர் ஆட்சி ,, ரூ. 5 00

திருச்செந்தூர் முருகன் சிறைவிடந்தாதி

உரையாசிரியர் : சு. அ. இராமசாமிப் புலவர். ரூ. 3 00

*கழக நூற் பேழைகள்

பழந்தமிழ் இலக்கண இலக்கியப் பேழை :

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென் கீழ்க்கணக்கு, காப்பியங்கள் ஆகிய பழந்தமிழ் இலக்கண இலக்கியங்கள் உரையுடன் கூடியவை அடங்கிய இப் பேழையின் குறைந்த விலை ரூ 680 00

பிற்கால இலக்கண இலக்கியப் பேழை :

பிற்கால இலக்கண நூல்களும், கோவை, உலா, அந்தாதி, கலம்பகம், பிள்ளைத் தமிழ், பரணி, பள்ளு, தூது, அகராதிகள், நிகண்டுகள், திறனாய்வு நூல்கள் இன்னபிற பிற்கால இலக்கி யங்கள் அடங்கிய இப்பேழையின் குறைந்த விலை ரூ 720 00

தமிழர் சமய இலக்கியப் பேழை :

தமிழர் சமயங்களான சைவ, வைணவ சமய நூல்கள் 54 அடங்கிய இப் பேழையின் குறைந்த விலை ரூ 710 00

பள்ளி மாணவர் பல்வகை நூற் பேழை

பள்ளி மாணவர்க்கு வேண்டிய கதை, கட்டுரை, வரலாறு, அரசியல், அறிவியல் இன்னபிற துறைகளில் பள்ளி மாண வர்க்குப் பயன்படும் வகையில் எழுதப்பட்டுள்ள பல்வகை நூல் களும் அடங்கிய இப் பேழையின் குறைந்தவிலை ரூ 745 00

---

*இப் பேழைகளின் விலை மாற்றத்திற்குரியன.

அப்பர் அச்சகம், சென்னை-1.